செங்கூரம் 300

DIGITIZED

LB
N17
121085
1.21085

1101
615-C1)

உ

குமரன்றுணை.

அகஸ்தியமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# செந்தூரம் 300.

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்,

மு. குழந்தைவேலுப்பிள்ளையவர்கள்

ஒல்லேட்டுப்பிரதியின்படி

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று:

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

## குருசாமிக்கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1917

இதன் விலை] — [அணா 10.

LB
121085

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் வருடம் 198
செப்பனிட்டு முடித்த
மாதம் வருடம் 198
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

உ

கடவுள் துணை.

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

# செந்தூரம் ௩௱.

வெண்பா.

காலுந் தலையுங் கலந்துநடு வாகிநின்ற
மேலுந் துரியம் விளங்குமே—காலாம்
வயித்தியமுந் நூறும் வழங்கவே சூத்திரம்
பயிற்றுங் கணேசனருட் பார்.

காப்பு.

பூதலத்தில் தென்பொதிகை தன்னில்வாழும் பூரணமே யென்குருவே சிவமேஅய்யா, *மாதவத்தால் அஷ்டசித்தி யெட்டும்பெற்ற வரிசையிலே வயித்தியநூல் வகையாய்ச்சொல்வேன், போதகத்தின் முகத்தானைக் கடைக்கேர்ட்டானைப் பூதலத்தில் நிறைந்தானைப் புதல்வன்றன்னை, சாதகமாய் மனமடங்கி யறிவிற்கூடித் தற்பரனாய் நின்றகண பதிகாப்பாமே. 1

## நூல்.

கணபதியின் பதத்தாலே மூமுக்கோணம் கரையடங்காப் பிறப்பறுப்பான் கடவுளான, கணபதியைக் குண்டலியிற் கண்டுதேறிக் கனலெழுந்து வாய்வுவந்த புரியஷ்டத்தால், கணபதியே பிறப்பிறப்பு ஆண்பெண்ணாகிக் கரைகொள்ளா நாதமொடு விந்துவாகி, கணபதியைப் பெற்றெடுத்த விந்துவாலே கழறுகின்ற விருகுறியுங் காணுகாணே. 2

காணப்பா புரியஷ்ட மெட்டினோடு கலந்ததப்பா பூரணத்தான் கண்டத்தோடே, தோணப்பா யிடகலைக்குச் சோடசமேயாயுஞ் சுகமாகப் பின்கலைக்குப் பன்னிரண்டாம், பேணப்பா இதில்விட்ட குறையினாலே பெண்ணோடு புருஷனங்கே சேரும்போது, ஊணப்பா பிரணவங்கொண் டெர்ந்த சென்மம் உத்தமனே யிதிற்பிறந்த நோய்கள்தானே. 3

தானென்ற சபையெழுத்துத் தொண்ணூற்றாறும் தத்துவமா யிவர்களுக்குப் பஞ்சகர்த்தாள், தானென்றே கொண்டணைக்குந் தசமாம்வாய்வு சாதகமாய் பானுடை தத்துவந்தான், தானென்று நின்றவிடம் வாதபித்தஞ் சார்ந்தசிலேற் பனத்தோடு மூன்றினாலே, தானென்ற வியாதியெல்லாம் வளருமப்பா சடலமெல்லாம் நோயிட்ட கூடுதானே. 4

கூகெட்டிக் குடியிருந்த குருவும்பரமேசன் கொன்னோயிட்டார் கற்பமெல்லாம் கூறுய்த்தின்னை, நாடுமப்பேர தொன்றேடே யென்றுவேறாய் ஈடைகொடுக்க மாட்டாமல் கற்பந்தின்றால், தேடுமப்பேர் சிவயோகஞ் செய்யவேணும் தெளிவாக வாதசித்தி காணவேணும், ஆடுமப்போ காயசித்தி பண்ணும்போது அதற்குமுன்னே யயமிருந்து தட்டுறேனே. 5

தட்டுறேனென்பதற்குக் கற்பங்கேளு சாதகமாய்க் காந்தமது பலந்தானஞ்சு, தெட்டிறதோர் வெண்ணாயது பலந்தாமொன்று திரமாகக் காரமது பலந்தானொன்று, ஒட்டிறதோர் சாரமது பலந்தானொன்று உத்தமனே தாளகந்தான் பலந்தானொன்று, பட்டிடவே பூநீறு கழஞ்சியொன்று பாங்கான வெண்கருவெள் ளெருக்கம்பால்வாரே. 6

வார்த்துவைக்கச் சலமாகும் சலத்தைவிட்டு மாட்டுவாய் பதினொன்று மருந்துங்கூட்டி, சேர்த்துநீ யரைத்திடுவாய் ரெண்டுசாமந் திரமாகப் பின்பதனை வில்லைசெய்து, போர்த்திடுவாய் வெய்யிலிலே உலர்ந்தபின்பு புகழான மூசையிலே யிட்டுமூடி, காத்திடுவாய் மேலோடு கொண்டுமூடிக் கைமுறையாய் சீலைமண்ணுங் கனக்கச் செய்யே. 7

செய்யப்பா உலைமுகத்தில் நாருத்திரெண்டு திரமாக ஊதிவிடு அழுகுமட்டும், மையப்பா வெடுத்ததனை யாறவைத்துப் பாங்காகப் பின்பொருக்காலழுகவூது, மெய்யப்பா பின்பதனைக் குகையில்வைத்து விளங்கவே பின்பொருக்கால் நன்றாயூது, அய்யப்பா காந்தமது தாராப்போலிருக்கும் ஆகாகா காந்தச்சத் தருமைதானே. 8

அருமையென்ற காந்தத்தைக் குகையில்வைத்து அப்பனே மூன்றுதரம் அழுகவூதிற், பெருமையென்ற காந்தமது சத்தாய்ப்போகும் பேச்சேது சூதமொரு பலத்தைத்தாக்கி, கருமையென்ற காந்தமது சோதித்தேறக் கருவனையில் வீரமுடன் காரங்கூட்டி, உருமையென்ற சாரமது பழச்சாற்றாலரட்டி யுலர்த்துவாய் பணம்போலே வில்லைசெய்தே. 9

வில்லைசெய்த மருந்தெல்லாம் சமனாய்க்கொண்டு மீறியதோர் காந்தமது உருகும்போது, சொல்லுவேன் சத்துக்குச் சமனாய்த்தாக்கு துடியாக வொவ்வொன்றாய்க் கொடுக்கவாங்கும், அல்லவே சமனாகத் தாக்கிப்பின்பு அப்பனே ஓடுகொண்டு மூடிக்கொண்டு, வல்லதொரு குகையமுக நன்றாயூது மகத்தான காந்தமது வங்கந்தானே. 10

தானென்ற காந்தமது சயமாகச் சாஸ்திரமெல்லாம்படித்தா ரருமையென்றே, நானென்ற ஆணவத்தால் வெளியிற்போட்டேன் நாட்டாதே கன்னமென்ற பிள்ளைக்கெல்லாம், வானென்ற சயத்தைப் பதனம்பண்ணு வண்மையாய்த் தேவியுட நாதங்கேளு, வேனென்ற அயப்பொடிதான் பலந்தானஞ்சு வெண்ணாயொடு தாளகமுஞ் சூதங்கூட்டே. 11



கூட்டியே சாரமொடு காரந்தன்னைக் குழியாக வதக்கியொரு பலந்தான் பாரு, மூட்டுவாய் பூநீறு கழஞ்சியொன்று முந்தியதோர் வெள்ளைக்கருவு நீராலாட்டி, மாட்டுவா யிருசாமம் அரைத்தபின்பு வளமாக வில்லைசெய்து வெயிலிற்போட்டு, நாட்டொ யுலர்ந்தபின்பு மூசைக்குள்ளே நயமாக வைத்ததனைக் குகைவாய்மூடே. 12

மூடப்பா ஓடுகொண்டு சீலைசெய்து முன்போலே யுருக்கியெடு வெண்கலமாயிருக்குந், தேடப்பா முன்போலே சோதித்தேறு சகமெல்லா மிரும்பினுட சயங்காணார், ஆடப்பா யிதனுட்டுச் சித்தாட்டு ஆஆ ஆ நாகமதில் கூடிற்றானால், வீடப்பா பலத்துதடா பிறவியேது விதமிஞ்சு மென்றுசித்தர் மறைத்திட்டாரே. 13

மறைத்திட்டார் அயத்திலேடு காந்தந்தன்னை மக்களே யயமிருந்துத் தட்டுமென்று, குறைத்திட்டா ரதுசவையுங் கழற்றுமுன்பே கொள்வதற்கு முதல்கற்ப மென்றுகூறார்; நிறைந்திட்டே னுலகமெல்லாம் சித்தாய்ப்போக, நிலையான ஆறுவரை யுறுதிசொன்னேன், முறைத்திட்டந் தப்பாமல் கற்பமேற முந்தவே யயக்காந்த மொழிந்திட்டேனே. 14

மொழிந்ததொரு அயக்காந்தம் பலந்தானொன்று முத்தமிழ்தேர் புலத்தியனே வகையொன்றுக்குத், தெளிந்ததொரு தங்கமது பலந்தானொன்று சேரவே மூன்றுமொன்றா யுருக்கியாட்டு, கொளுந்ததொரு கல்வத்திற் பொடியாய்ச்செய்து கூட்டப்பா கண்டிடைக்குச் சவ்வீரத்தை வளர்ந்ததொரு ரசமதிலே பனியிற்போடு மாட்டடா தங்கவிடை சூதந்தானே. 15

சூதமுற வாலைதன்னை நான்மூன்றிற்றான் சுறுக்காக நித்தியமொரு சாமமாட்டி, நாதமுற முலைப்பாலி லாட்டிஆட்டு ராப்பனியிற் போட்டுவிடு மூன்றுநாளாய், வாதமுமோ வேதையிடும் வாதிக்கல்லோ வயித்தியத்தில் வாலைரச மார்க்கஞ்சொன்னேன், வேதையிது லோடாது ஆசியாதே வேதைக்குக் குருவேதே விளம்பக்கேளே. 16

விளம்புவேன் வாலைரசங் கண்டிடைக்குரெட்டி மீறியதோர் கெந்தியிடு சீலைபத்தொன்று, வளம்பெறவே பொற்றலையின் சாற்றாலாட்டி வாசமாயிரண்டுநா ளரைத்தபின்பு, உளம்பிலக்கக் குப்பியிலே யுலர்த்தியிட்டு உத்தமனே வாலுகையில் தீயைமூட்டு, தளம்பெறவே மூன்றுநாள் முத்தியிட்டு தப்பாது தளமுறுசெந் தூரமாமே. 17

செந்தூரஞ் செகப்பென்ன முருக்கம்பூவோ தேகத்துக் கழிவேது வயிரவனைப்பூசி, செந்தூர மெடுத்தடக்கிச் சிவனைப்பூசி தேவியொடு கணபதிக்குப் பூசைபண்ணி, செந்தூரந் தின்பதற்குத் தீட்சைக்குள்ளே செயமாகக் கிரகலக் கினமுஞ்சொன்னேன், செந்தூரங் குன்றியிடை மூதண்டத்தின் திரமான லேகியத்திற் பொதிந்துதின்னே. 18

தின்னவே லேகியந்தான் முன்பேசெய்வாய் தீட்சையிரு நூற்றுள்ளே திடமாய்ச்சொன்னேன், மண்ணவே லேகியத்தை யாருஞ்சொல்வார் வளமாகக் காசிடைலே யெய்திற்கொள்ளு, உண்ணவே மண்டலங்கொள் வயது கண்டு உத்தமனே நோய்களென்ற தெல்லாம்போகும், அன்னமொடு பால் தேனி பத்தியந்தான் அப்பனே மற்றொன்று மாகாவாதே. 19

ஆகாது யென்றுசொன்னே னேதேதென்று லையிருக்குந் தட்டுதற்குப் பத்தியமேவேணும், வாகான செந்தூரம் நோய்கொண்டோர்க்கு வளமான வழுப்பான மறிக்குகூட்டித், தாகான மண்டலமே குன்றிலீதம் சாதித்தால் நோயெல்லாம் தலையுண்டேபோம் யாகான பத்தியங்கள் காக்கவேண்டாம் பத்தியமாம் புகையிலையுப் புளியுந்தானே. 20

தானென்ற ரெண்டும்விட்டுக் கொண்டார்க்கேளு தவறாது சகலவியாதிகளுந்தீரும், நானென்ற வுடம்பெடுத்தால் சாகாக்கல்வி உத்தமனே யிதுக்கல்லோ தளசெந்தூர, மானென்ற பெண்கள்வலைக் குள்ளே சிக்கி மாள்வதற்கோ செந்தூர வைப்பைச்சொன்னேன், தானொன்ற பேச்சும்போய் தன்னைக்காணுஞ் சாதகமாய் லட்சியத்தின் குறிப்பைப்பாரே. 21

பாரப்பா வாசியினால் யோகமாகும் பரிவான தீட்சையினால் சித்தியாகும், காரப்பா சாபமெல்லாம் நிவர்த்தியாகும் கற்பத்தில் முதல்கற்பமெய்க் காந்தங் கொள், சேரப்பா சித்திபெற்ற தேகமேலே செந்தூர மயத்தாலே தெளிந்து காணும், பேரப்பா கேட்டேனே யெமதூதர்கள் பேசாதே யோடுவார்காண் பின்பாராதே. 22

பாராதே சித்தாந்த மொன்றுமில்லை பஞ்சகர்த்தாள் சடலமது வேகுமட்டுஞ், சேராதே யென்றுசொல்லும் வேதாந்தத்தைத் தெளிந்தறிய மாட்டார்கள் சைவமாமு, கூறாதே பூரணமா மென்றதெய்வக் கோவிலுக்குட் சுயம்புவஸ்து பாதாரத்தை, சேராதே யிருப்பதென்ன வென்றுசொல்லிச் செப்புகிறேன் சித்தாந்தந் தெளியத்தானே. 23

தெளிவான மனத்தோர்க்கு வாதஞ்சொன்னேன் திடமற்ற மூடருக்குத் திடமுஞ் சொன்னேன், தெளிவான பேருக்கு வைத்தியஞ் சொன்னேன் செய்முறையிற் கற்பமெறி கூடவேண்டி, தெளிவான மாணவர்க்கு ஞானஞ் சொன்னேன் சித்தியுடன் முத்திபெற யோகஞ்சொன்னேன். தெளிவான மனத்தோர்க்கு மவுனஞ்சொன்னேன் தீட்சையொடு பூஜைவிதி செப்பினேனே. 24

செப்பினேன் வாதத்தி லட்சம் காப்பு திரமான வைத்தியத்தி லிரண்டுலட்சம், செப்பினேன் வாதத்தி லாயிரந்தான் தெளிவாக விருகாண்டந் திரமாய்த் தேர்ந்து, செப்பினேன் சூத்திரந்தா னிருநூறப்பா தீட்சைவிதி யிருநூறுந் தெளிவாய்ச்சொன்னேன், செப்பினேன் ஞானமா யிரந்தான் தேர்ந்து தெளிவாக ஒருநூறில் திறந்திட்டேனே. 25



திறந்திட்டேன் வைத்தியத்தில் குறுக்கிலட்சம் செப்பினே னதிற்பாதி யதனைத்தேர்ந்து, திறந்திட்டேன் வாதத்திற் சூஸ்திரம்போல் தெளிவாக வைத்தியத்தில் சூஸ்திரமேகட்டி, திறந்திட்டே னிவ்வண்ண முந்நூறுந்தான் சிறுபிள்ளைக் சாகுலும் வைத்தியந்தான், திறந்திட்டேன் பூரணசூஸ் திரந்தானப்பா செய்யிலிரு பத்தோரா யிரத் தறுநூறே. 26

நூறான யிருபத்து ஒன்றுநூறு நுகரவே அறுபத்து நாலுகாண்டம், வீறான யிதைக்குறுக்கிச் சூஸ்திரம்போலப்பா வெட்டவெளி பூரணக்குஸ் திரத்தைச் சொன்னேன், கூறான யிருநூற்றுக் குள்ளேகேளு கொட்டினேன் சரியையொடு கிரியையோடும், பேறான யோகமொடு ஞானத்தோடும் பிலத்தசுவா சந்தனிலே பேணிக்காணே. 27

காணப்பா விட்டகுறை மார்க்கத்தோர்க்கு கைவிட்ட சூஸ்திரமாய் வெளியிற்போட்டேன், தோணப்பா கற்பத்திற் பத்துநூறுந் துடியாகச் சுருக்கியிதை நூறாய்ச்சொன்னேன், பேணப்பா கற்பநூ லிருநூறுஞ் சொன்னேன் பிலத்தவொரு மாந்திரீகம் நூறுஞ்சொன்னேன், பூணப்பா யந்திர தந்திர மயேந்திரசாலம் பூட்டினே னாயிரந்தான் புகழ்ந்துபாரே. 28

பாரப்பா அடிதொடுத்து கற்பங்கொண்டு பரிவாக உண்டுவருங் காலந்தன்னில், சாரப்பா நாதமொடு பித்தத்தாலே தனித்தசிலேற் பனத்தாலே தாறுமாறாய், சூரப்பா பாராமல் கற்பங்கொண்டு சுழன்றலையா தேநோய்கள் வருகும்நேரம், காரப்பா செந்தூர மினங்கள் தோறுங் கட்டாய்ச்செந் தூரித்துக் கடக்கவையே. 29

வையப்பா கற்பங்கள் கொள்ளுமுன்பே வகையான லேகியங்கள் சூரணங்கள், செய்யப்பா கிருதமொடு தயிலமோடு செய்துகொண்டு திஷ்டியப்பா கருமத்தோடு, பொய்யப்பா வுரைப்பதென்ன புத்திசொன்னேன் புலஸ்தியனே யிதுக்குரைத்த வைத்தியந்தான், மெய்யப்பா வென்றோர்க்கு மெய்யேயாகும் விழலென்றோர் பொய்யாகும் விளம்பக்கேளே. 30

## கற்பூரசலாசத்து.

கேளப்பா கற்பூர சலாசத்துத்தான் கெடியாகப் பலமொன்று பொரிகாரந்தான், நாளப்பா பலமொன்று ரெண்டுங்கூட்டி கலமான பருத்திநீறு துத்திவேர்த்தோல், நீளப்பா பாங்காகக் கஷாயம்செய்து நிசமாக விட்டாட்டு ஒருநாள்மட்டும், மானப்பா அஞ்செருவிற் புடத்தைப்போடு ஆதியெடு கல்வத்தி லாட்டுதானே. 31

ஆட்டத்தா னாருமடா; வெண்கருவைவிட்டு அரைத்துவில்லை செய்ரவி யிலுலர்த்திக்கொண்டு, மாட்டவே அஞ்செருவிற் புடத்தைப்போடு வாகாக அரைத்து அஞ்சு காருமானால், நாட்டவே வெண்பொடியாம் பதனம்பண்ணு கலமான பெருவயிறும் சோதரங்கள், ஊட்டவே நீர்செரிப்புக் கல்லடைப்பு ஓமெப்பா வெடியுப்புச் சுன்னங்கீரே. 32

வெடியுப்புப் பலம்பத்துப் பூநீறுபத்து வேகமடா பழச்சாற்றிற் சாம மாட்டி, அடியிருப்புக் கரண்டியிலே வறுத்து வைத்து அப்பனே கொதிக்க வைக்கச் சுண்ணமாகும், கொடியதப்பா பீங்கானில் நீராகும் கூறினேன் வைத்தியத்தி லுப்புநீரே, அடியப்பா சலாசத்துத் தனக்குமுன்னே தோயப் பா அதைத்தன்னைப் புடமிற்போடே. 33

போடப்பா வதுவல்லோ வறுத்துவாய்க்கும் பொறிவந்து கற்பங்கள் கொள்ளும்போது, நாடப்பா தசவாய்வு பேதங்கொண்டு கச்சாம்பல் கொடி யுதிரம் பெருத்துக்காலும், கூடப்பா விதுக்கல்லேர் காரச்சுண்ணங் கொட் டினேன் சத்தோடே கூட்டிக்கொண்டு, சாடப்பா உன்கையிலே சத்துக்காரந் தடையறவே புலிபோலே தாக்கும்பாரே. 34

அப்பிரசத்து.

தாக்கிடவே அப்பிரகச் சத்துசொல்வேன் சாதிப்பே னப்பிரகம் நவநீ தந்தான், வாக்கிடவே பலமொன்று வெடியுப்போடு வளமான வெங்காரஞ் சாரம் வெள்ளை, தாக்கிடவே தாளகமும்கெவுரிசூதஞ் சங்குமுடி தாரமுறு காரசிங்கு, தேக்கிடவே பூரகமுலர்ந்ததப்பா சேர்த்திடுவாய் வகைக்கு மொரு கழஞ்சிதானே. 35

கழஞ்சியடா பூநீறு பதினொன்றாகக் கட்டுமடா நவநீதத் தோடுங்கூட்டி, வழஞ்சியரை கல்வத்தில் வெள்ளெருக்கினாலே மாட்டிடுவா யிருசாமம் வில் லைசெய்து, குழஞ்சுவிட வச்சிரக்குகைக் குள்ளேவைத்துக் கூறுகச்சில்வி ட்டுச் சீலைசெய்து, கழஞ்சுதடா அஞ்சுதரமினகப்பாரு தாக்குலையி லூதிட வே சத்துமாமே. 36

சத்தடா சோதித்தால் மணியாந்தன்னைச் சதிராகச் சோதிக்க மருந் துகொண்டு, ஒத்தரசஞ் சத்திடைக்குச் சோதித்தேபார் உத்தமனே சரிகை வெள்ளி போலே சயம், பெத்துதடா சூதத்தைப் பதைக்கையிலேகொல் லும் பெரியோர்கள் நவநீத சத்துவிள்ளார், சித்திவரும் கற்பத்துக் குறுதி மெத்த சேரப்பா புடத்தங்கஞ் செலுத்தியாட்டே. 37

ஆட்டிடுவா யப்பிரக சத்துத்தானே அப்பனே பலமொன்று உருகும் போது, மூட்டிடுவாய்த் தங்கமொரு பலந்தானப்பா மூசையிலே ரெண்டு மொன்று யுருக்கிவாங்கி, போட்டிடுவாய்க் கல்வத்திற் பொடிக்கத்தாளம் புகழாகக்கண்டிடைக்கு வீரம்போடு, காட்டிடுவாய்த் தங்கவிடை சூதம் வாரு கைமுறையாய் முலைப்பாலி லரைத்துப்போடே. 38

போடப்பா காளொன்றுக் கொருசாமந்தான் புகழாக மூன்றுநாள் பனியிற்போடு, ஆடப்பா சுருளட்டை போலேசூத மாகுமடா கெந்தகந்தான் ரெட்டிப்பிட்டு, தேடப்பா பத்திலொன்று சீலையுமிட்டு தீர்க்கமாய்ப் பொ ற்றலையின் சாற்றாலாட்டி, சூடப்பா ரெண்டாக ளரைத்தபின்பு சுகமாகப் பொடிசெய்து குப்பிக்கேற்றே. 39



ஏற்றியே வாலுகையி லெரிப்பாயப்பா என்சொல்வேன் மூன்றுநாட் சென்றபின்பு, ஆற்றியே குப்பிக்குள் சலாகையிட்டு அடியிலே கிண்டிப்பா ரகாரத்தாலே வாத்தியே செந்தூரம் பவளவர்ணம் வாச்சுதடா காயசி த்தி வசமாய்ப்போச்சு, தேற்றியே விடுவனென்று தேகந்தன்னைச் சித்தி பண்ணு முத்திபண்ணு திறத்தைக்காணே. 40

திறமான அப்பிரக செந்தூரந்தான் செய்வதென்ன உறுதியென்றால் கற்பத்தாலே, திறம்பெற்ற தோஷங்கள் சயங்கள் மேகம் நிலைகெட்ட கண் மயக்கம் மையல்தாகம், குறமான குட்டங்க ளசாத்தியரோகம் குன்மங் கள் முகரோகம் மூலரோகம், அறவான வாதபித்தஞ் சிலேற்பனத்தால் அளவற்ற நோயெல்லா மகன்றுபோமே. 41

அகன்றுபோ மப்ரகசத் தென்றசொன்னால் அப்பனே கற்பத்தை யுறுதிபண்ணு, விகண்டமே வாராது விஷமெல்லாம்போம் வேணபடி கற் பத்தைத் தின்றுதின்று, அகண்டமெல்லாம் நீயாச்சு மலைக்கவேண்டாம் அப்பனே வழலைதள்ளிக் கடுக்காய்கொண்டு, இகம்பெறவே மூலிகற்பங் கொள்ளும்போது இனியில்லா நோய்களெல்லா மெதிர்க்கும்பாரே. 42

எதுத்துவரும் நோய்களெல்லாம் தூரத்திலோட்டு மிதத்தைவிட்டுப் பாத் தாக்குள் ளாகப்பண்ணும், மதிக்கவருங் கற்பமெல்லாம் வளமாயேற்று மனம் நினைவை யறிவோடே வளர்த்தேயேறந், துதிப்பதற்கு நாதஒலி காதிற்கேட் குஞ்சொற்பெரிய குண்டலிக்கு ணேதிமீறும், சதிர்க்குளித்து அப்பிரக சத் துத்தங்கள் கண்டாயோ செந்தூர மாதையாலே. 43

நிமிளை சத்து.

ஆகாகா நிமிளைசத்தைக் கேளுகேளு அப்பனே பொன்னிமிளை பலந் தானொன்று, பாகான ரோமமது பலந்தானொன்று பழச்சாற்றி லூறவைத்து மூன்றுநாள்தான், வாகாகக் கழுவியதின் மேலேசுத்தி மைந்தனே அரிதா ரம் வங்கம்ரெண்டு, சாகவே பொன்னிமிளை மேற்பொதிந்துபின்பு சாத்தடா ரோமத்தைச் சார்ந்துகேளே. 44

கேளப்பா குகைக்குள்ளே அரைப்பலம்பூரகம் செடியாக வைத்ததின் மேல் மயூரம்நிற்கும், வேளப்பா அரைப்பலந்தான் பாதிவைத்து வெண் காரம் அதின்மேல்கால் பலந்தான்வைத்து, வாளப்பா பொன்னிமிளைக் கலசம்வைத்து மாட்டடா வதின்மேல்கால் பலந்தான்காரம், நாளப்பா வதின்மேலரைப் பலமயூரம் நன்றாக வதின்மேலே யரைத்திடுநீறே. 45

பூநீறு சுழஞ்சியொன்று மேலேதூவிப் பூரக மரைப்பலந்தான் அதின் மேல்வைத்து, வனாகக் குகைவாயி லோடுமூடி வீரியமல் மண்சீலை யஞ் சசெய்து, தானாக வுலையில்வைத்து ஊதுஊது சாந்தமாம் பொன்னிமிளைச் சத்துமாகும், வானவர்கள் போற்றுமிந்த நிமிளைசத்து வளமான வெண்கல ம்போல் தகரும்பாரே.

பாரப்பா நிமிளைசத்து சோதித்தேயின் பரிவான போக்கவிதமாயிய மாகும், ஆரப்பா நிமிளைசத்து யாருஞ்சொல்லார் அப்பனே வயித்தியத்தைக் குறியாருந், சேரப்பா சர்ப்பத்தால் வந்தநோய்கள் திருமடா நோய்களெல்லாம் படிகாணனென்றால், மேரப்பா பருப்பதம்போற் பஞ்சுகாலத்து மினைக்குபோற் றீயைவைத்த கதைபோலாமே. 47

நிமிளைச்செந்தூரம்.

போமென்ற நிமிளைசத்துப் பலந்தானொன்று பூட்டடா மூசையிலே யுருகும்போது, ஆமென்ற சுருநாகம் பலந்தானொன்று அப்பனே தங்கமது பலந்தானொன்று, சமென்றேன் தங்கமொடு வங்கம்மிரண்டு சாதகமாய்க் கலந்திற் பொடிக்கத்தானாம், வேமென்றேன் வீரமது பலந்தானொன்று மேலான முலைப்பாலே விட்டுஆட்டே. 48

ஆட்டையிலே கோழிமலம் வெள்ளைகேளு அப்பனே காலபலந்தான் கூடப்போட்டு, மூட்டையிலே வாலைரசம் சவ்வுப்போலாம் முறையான குதம்ரெண்டு பலமேவாரு, மாட்டையிலே மூன்றுநாள் பனியிற்போடு மறுபடியுஞ் செந்தகந்தான் பலநீராறு, கூட்டையிலே பொற்றலையின் சாற்றலாட்டிக் கொடியசிலைக் காற்பலமுங் கூடப்போடே. 49

போட்டிடுவாய் வில்லைசெய்து ரவியிற்றானே பொடிசெய்வாய் பின்பெடுத்துக் குப்பிக்கேற்றி, நாட்டிடுவாய் வாலுகையில் மூன்றுநாள்தான் நலமாக முத்தியும் நன்றாயிட்டு, மூட்டிடுவாய் சலாகைகொண்டு சோதித்துப்பார் முனையிலே காகரக்கும் பதந்தானப்பா, கூட்டிடுவாய் குப்பிதனை யுடைத்துவாங்கு குய்யசிவப் புறங்கியினை சுருக்குத்தானே. 50

சுருக்கான செந்தூரம் நிமிளையாச்சு சொல்லக்கேள் ஒருபோது குன்றி யுண்ணைக், கறப்பான ஆவின்பால் தன்னிற்கொள்ளக் கண்விழித்து மூமூன்னே பிணமும்பேசும், வெறுத்தானே சடலத்தைக் காலனப்பா மெய்யுனைச்சல் பொருத்துனைச்சல் சதைக்குள்தோஷம், முறுக்கான விஷகடிகள் விட்டுத்திற்குஷ்டம் மூகவாத மேகமென்ற தெல்லாம்போமே. 51

போமடா வாதத்தில் வந்ததோஷம் போகுமடா பித்தத்தால் வந்ததோஷம், மாமடா சிலேற்பனத்தால் வந்ததோஷ மல்லாந்தான் நிமிளைசத்ததைக் கண்டபோதே, நாமடா உனக்கெதிரோ வென்றுநோய்கள் நாட்டிலே யெவரிடத்துஞ் சேரப்போனால், காமடா நிமிளையங்கே கண்ணுற்பார்த்தால் ஓட்டோடே கடல்புக்குங் கதியில்லாதே. 52

இல்லாதே யிருந்துகொண்டு சுற்பங்கொண்டா லிலட்சியத்தி லறிவோடே வாசிபார்த்து, வல்லமையாய் சாதிக்கும் யோகசித்தி வளமான குளிகைமுதல் மந்திரதீட்சை, கல்லதெற்கு பூசைவிதி யமுர்தலேகியம் நலமான வாதமொடு பிவக்கக்கண்டு, செல்லுவாய் பின்பங்கே சித்தரோடே சேரலாம் கைகொள்வார் திறத்தைப்பாரே. 53



திறமான வயித்தியத்தைச் சொன்னேனப்பா திறங்கெட்ட லோகர்க்கோ செப்பினேனென்கே, குறுவாத ரசவாதத் துள்ளாழுந்திப்பின்னே உத்தமனே யினசாரி சரக்குச்சேர்த்தால், நிறுவிக்கும் வயித்தியந்தான் வாதிக்கரும், நேரான காலசித்தி நிசமதாகும், விருதடா பேசியே லோகத்தோர்கள் வேரோடே வயித்தியமெல்லாம் வருமென்பாரே. 54

தாளகநீறு.

பாரப்பா புலத்தியனே அய்யாகேளு பாங்கான தாளகத்தி னீறுசொல்வேன், சேரப்பா தாளகந்தான் பலந்தாமொன்று திறமான கல்சுன்னத் துள்ளேவைத்து, ஆரப்பா அமரிபடி விட்டுநீற்றுந் தாளகந்தான் சுத்தியதா யிரண்டுபத்தில். வேரப்பா பழச்சாறு படிதானாட்டு வெள்ளைச்சி முலைப்பால்தான் படிதானாட்டே. 55

ஊட்டியபின் னரிதாரம் போராட்டிச்சா றத்திலே யரைத்திடுவா யிரண்டுசாமம், ஆட்டியபின் வில்லைசெய்து ரவியிற்போடு அப்பனே மூன்றுநாள் காய்ந்தபின்பு, கூட்டியதோர் செருப்படிகால் படியின்சாறு கொட்டுவாய் குகைக்குள்ளே புரச்சாம்பல், மாட்டியே மேல்மூடிச் சீலைசெய்து நயமாக விரண்டெருவிற் புடத்தைப்போடே. 56

சூதபற்பம்.

புடம்போடத் தாளகந்தான் வெளுத்துநீறும் பேசாதே தாளகத்தின் வெள்ளைதன்னைத், திடம்பெறவே சிமிழுக்குள் பதனம்பண்ணு செப்பக்கேள் சூதபற்பத் திறமாய்ச்சொல்வேன், அடம்பிலையும் கடம்பிலையும் சிறுபுட்காறு அப்பனே வகைக்குமொரு படிச்சாறுக்குள், விடமதிட்டு வார்த்திலே கார்த்தைச்சாறு விளங்கவே படியொன்று அதிலூன்வாரே. 57

வார்த்திடுவாய் மூன்செய்யும் வரிசைகேளு வாகான காட்டுள்ளிக் கிழங்குச்சாறு, சேர்த்திடுவாய் கார்த்திகையின் கிழங்குச்சாறு சேரவே பண்ணுவகோல் மூலிச்சாறு, வார்த்திடுவாய் வகைக்குமொரு படிசாறாக எடுத்தல்லேவர் சூதமொரு பலத்துக்குத்தான், பார்த்திடுவாய் காந்தசத்தின் னிணைத்துள்ளே பதையாமற் சாருமடா சுருக்குத்தாக்கே. 58

சுருக்கிட்ட பின்பெடுத்துச் சூதந்தன்னைத் துடியாகக் கல்வத்தி லிட்டுக்கொண்டு, வெறுத்திட்ட மூன்சாற்று லரைப்பாயப்பா மெழுகுபோ லாகி உத்தமனே வரும் வில்லைசெய்வாய், உருக்கிட்ட ரவியிலே காயப்போடு குகைக்குள்ளே வைத்துமூடி, வெறுக்கிட்ட சீலைசெய்து புடத்தைப்போடு வெளியிலே பலரபூசை விளம்பச்செய்யே. 59

செய்யவே தேவியங்கே வார்த்தைசொல்வாள் திடமான சூதபற்பம் பாங்காக வாச்சுதென்பாள், பையவே அஞ்செருவிற் புடத்தைப்போடு ரசவெள்ளை ரசகர்ப்பூரம், மெய்யப்பா கற்பத்தால் கூட்டமீறில் விஷநீரால் குறைநோவு கண்டதானால், மையவே சூதபற்பங் குன்றிதானும் மதத்தான தாளகத்தின் பற்பங்கூட்டே. 60

கூட்டுவாய் குன்றியிடை யிரண்டுக்கூட்டிக் கொள்ளுவாய் நீருண்டிவ் வெப்பம்பட்டை, நீட்டுவாய் பலம்பாது வெள்ளாட்டுடைச்சம் நீசுமாக அந்த பந்து பலமேசேர்த்துக், காட்டுவாய்ப் பூத்தயிலம் வடித்துவாங்கி கருவான வீழிவேர்ச் சூரணமேசெய்து, மாட்டுவாய் செருப்புக்கால் தனிச்சாறுக வாங்குவாய் படிநாலு மதனில்வாரே. 61

வாரப்பா பனைவெல்லம் பலந்தான்பத்து மருவியே கரைத்துவெள யடுப்பிலேற்றிச், சேரப்பா கமலத்தி யாகவூட்டு செப்பினதோர் வெம்பிருட தயிலந்தன்னைக், கோரப்பா படியொன்றுக் கூடவிட்டு கொட்டவே வீழிசூ ரணத்திறேடு; சாரப்பா படியவாதான் புங்கம்பூயுத் தனிச்சூர ணத்தோட லைரய் படிதான்போடே. 62.

போடப்பா மிளகுசுக்கு ஓமங்காயம் புத்தோடு தொட்டியொடு இரும்பு லோலம், ஆடங்கேள் சீரகமு மதாரமோடு அப்பனே வசையொன்று கழஞ்சி யொன்று, நாடக்கேள் கார்கோலரிசி பலமோதாது நாட்டமா பலம்காது பறங்கிப்பட்டை, சூடங்கே ளிவருப்பாய்ச் சூரணமேசெய்து சூரணமெல் லாமொன்றாய்க் குட்டிவையே. 63

வைத்தபின்பு காரெள்ளுப் பலந்தானஞ்ச மருவியிடி செந்தொட்டைப் பலமிரண்டு, வைத்தபின்பு சூரணத்தைப் பிசைந்துகொண்டு நலமான பாகு செய்து வருமந்தோம், பொய்த்தல்ல சூரணத்தை யதிலேபோட்டு பூண வேதேனுமொரு படிதான்வாரு, மெய்த்திடவே ஆவியெய் படிதான்வாரு மெழுகுபதம் ஆம்போதே வழித்துவாங்கே. 64

வழித்துவைத்து பிங்காலுக் குள்ளேநீதான் வாசாகத் தினமொன்றுக் கிருநேரந்தான், கழிப்பாக லேகியத்தைக் கழஞ்சிவீதம் கர்த்தாவை மன தாக்குள் தியானம்பண்ணி, ஒழித்திடவே முன்சொன்ன பற்பங்கூட்டி உண்ணவே மண்டலந்தான் புளியாகாது, தழிப்பான புகையிலையும் வழு தலங்காய்விட்டு தகையாகப் பாலுப்பைச் சத்தைக்கூட்டே. 65

கூட்டவே பதினெட்டு குஷ்டமெல்லாம் குடிபோகு மென்றுசொ ல்லிச் சட்டைதள்ளுர், தாட்டோட்டு சாராது பத்தியந்தான் தப்பில் சண ணுமடா தானகமுஞ் சூதபற்பம், வீட்டோடே யிருந்தபின்பு பத்யங்காத் தல் வெருகுறுக்காய் கேட்குமடா சூதபற்பம், பாட்டோடு துன்பம்விட்டுத் தயாரம்நீங்கிப் பரிசினத்தின் வேதையைப்போல் தேகமாமே. 66

அண்டச்சத்து.

ஆமப்பா அண்டோடு பலந்தாறென்று அப்பனே சூதமொடு காரசாரந், தாமப்பா கெவுரிவென்னை யரிதாரந்தான் சாதகமாய் மிறுதார சிங்கியோடு, போமப்பா வகையொன்று கழஞ்சிரெண்டு புதிதான கல்வத்தி லரைக்க கரு. நாமப்பா வெள்ளருக்கு விட்டுஆட்டி நலமாகச் சமம்ரெண்டு வில்லைக் கட்டே. 67



கட்டியபின் ரவியிலே மூன்றுநாள்தான் காய்ந்தபின்பு குகைக்குள்ளே வைத்துமூடி, வொட்டியபின் சீலைசெய்து உலையிலூது உத்தமனே வொரு மணியாய் நிற்கும்பாரு, வெட்டிணியா மண்டோடு வெண்கலம்போலாகும், விள்ளார்க ளுபாரித்துக் காதியப்பா, அட்டியில்லை யண்டசத்தைச் சோதித் தேதான் அப்பனே ஈயந்தான் பலந்தான்நூக்கே. 68

தூக்கப்பா சமனாகத் தங்கந்தன்னைத் துடியாக விரண்டுமொன்று யுருகு ம்போது, தாக்கப்பா சூதமொரு பலத்தைவாரு தவளையைச் சற்பமது விழுங்கும்வாறும், போக்கப்பா நாகமொரு பலத்தைப்போடு போட்டபி ன்பு வீரமொரு பலந்தான்போடு, வாக்கப்பா லிங்கமொரு பலந்தான்போ டு மருவிநின்று உருகுமடா களங்கமாச்சே. 69

ஆச்சப்பா களங்கத்தைக் கல்வத்திட்டு அடங்காத கெந்தகந்தான் பொட் டிப்பிட்டு, வாச்சப்பா பத்திலொன்று சிலையுமிட்டு வாகாகச் சற்றுறைப் பாலாலாட்டு, வீச்சப்பா நாளொன்று பொற்றலையின்சாற்றால் விளங்கவே ரெண்டுநாளானபின்பு, பாச்சப்பா வில்லைசெய்து ரவியிற்போடு பாங்காக மூன்றுநாள் காய்ந்தபின்பே. 70

காய்ந்தபின்பு குப்பியிலே செலுத்திக்கொண்டு கருணைபெற வேணு மென்றே வாலுகைக்கெந்திரம், வாய்ந்ததோர் மூத்தியு மூட்டிமூட்டு வன மாக நாலாநாள் குப்பிவாங்கு, சாய்ந்ததொரு அருணனைப்போற் செந்தூர ந்தான் சாதிக்கு மெதிராளி யெதிர்க்கமாட்டான், ஆய்ந்ததொரு அண்டத் தின் வங்காக மடாசுழஞ்சி சூதகெந்தி யருளைப்பாரே. 71

அருளான சற்பங்கள் கொள்ளும்போது அடங்காத தாகமொடு நீரிரக் கம், மருளான மயக்கமொடு கன்னிமையல் வாதத்தி ரெழுந்த பீனி சம், சுருளான மந்தார காசமோடு சுவாசகா சத்துடனே சதையில் ரோகம், கருவான கற்பத்தால் கலந்தநோய்கள் கண்காணு தோஷமப்பா தோஷம் கண்டுபோரே. 72

க்ஷயரோகத்துக்குலேகியம்.

கண்டுகொள்ளு மண்டலத்தின் செந்தூரந்தான் கலக்குமடா நாடியெ ல்லா மிறுகுந்தேகம், ஒன்றுவிடு குன்றியிடைப் பனைவெல்லத்தில் உத்தம னே ஒருபோது கொண்டாற்போது, மண்டுகின்ற க்ஷயரோக மிஞ்சிற்று குல் வகையொன்று சொல்லக்கே ளாடாதோடை, இண்டுசங்கு அதுவளை முருங்குமுல்லை இலந்துளசி கண்டங்கத் திரியாமென்னே. 73

என்னவே மூலிகைதான் வகையொன்றுக்கு இடித்ததொரு சாறப்பா படிவீதந்தான், சொன்னசொன்ன மூலிட சாற்றையெல்லாம் தோண வே பனைவெல்லம் பலமுமூன்று, அன்னவே யடுப்பில்வைத்துக் காயும் போது அரத்தையொடு திரிகடுகு திரிபலாதி பின்னவே கற்கண்டு வசம்பி னோடு விளங்கவே வகையொன்று பலந்தா ரெண்டே. 74

பலமான தொருபலத்தாள் நெற்பொரியுங்கூட்டிப் பாங்காக மருந்தை யெல்லாம் சூரணித்து, செலமான பாகெல்லாம் பாகஞ்சேரில் திடமான சூரணத்தை யதிலேபோய்ச்ச. பிலமான தேனதிலே படிதான்வாரு பேசாதே யாவின்நெய் படிதான்வாரு, குலமான லேகியமாம் வழித்துவைத்து கூசாதே மீக்காணிற் பதனம்பண்ணே. 75

பதனமாய் வைத்திருப்பாய் லேகியத்தைப் பாங்கான கழஞ்சிறை யெடுத்துக்கொண்டு, சதனமா யண்டத்தின் செந்தூரத்தைச் சுறுக்காகக்குன்றி யிடை யொருபோதுண்ணு, விதனமெல்லா மொழிந்ததடா க்ஷயரோகங் கள் வேரோடே அத்ததடா உபாசத்தின் வேகம், மதனகா மேகமாம் விந்துநட்டும் மங்கையரைத் தோய்ந்தாலும் வாராதென்னே. 76

வாராது கிருஷ்ணஅப் பிரகந்தன்னை வாய்ப்பாக நவநீத மாகச்செய்து, பேராது பலமொன்று வாங்கிக்கொண்டு பிலத்தவெடி யப்புடனே காரஞ் சாரஞ், சாராது சினமொடு சூடன்கூட்டித் தயவான கல்லுப்பு வகை யொன்றுக்கு, வாராதே கழஞ்சிபொன்று கூட்டிப்போட்டு வாகான பழச் சாற்று லொருநாளாட்டே. 77

ஆட்டியபின் வில்லைசெய்து உலரப்போட்டு ஐம்பதெருக் குள்ளேதான் புடத்தைப்போட்டு, மூட்டியபின் யெடுத்ததனைக் கல்வத்திட்டு முழங்கவே கற்பூர வல்லிச்சாற்று, ஆட்டியபின் னரைத்திடுவாய் பலர்தான்கெர்தி உரப்போடு காலொன்று செவருல்லில்லை, காட்டுவாய் ரவிமுகத்தி லுலர்ந்த பின்பு கட்டக்கேள் ஐம்பதெருக் குள்ளேபோடே. 78

போடப்பா புடமாறி யெடுத்துக்கொண்டு புகழாகப் பழச்சாறு கல்வத் திட்டு, ஆடப்பா சாமொன்று அரைத்துவில்லை அப்பனே யரைத்துமுன் போற் புடத்தைப்போடு, தேடப்பா ஆறினபின் கல்வத்திட்டு திடமான குட்டித்தக் கவிச்சாற்றால், கூடப்பா சாமொன்று அரைத்தபின்பு குமுற வே வில்லைசெய்து புடத்தைப்போடே. 79

புடமாறி யெடுத்ததனை யெருக்கம்பாலாற் பேசாதே சாமொன்று அரைப் பாயப்பா, திடமாக வில்லைதனை உலர்த்திக்கொண்டு சிறப்பாக முன்போ லே புடத்தைப்போடு, நடமாடு பின்பொருக்கால் பழச்சாற்றாலே கலியாதே தினமொன்று அரைத்தபின்பு, உடனுறு சந்துருவால் காரஞ்சாரம் உத்த மனே தருக்கெல்லாந் தின்றவாறே. 80

வாறுடனே கறுத்திருந்த தேயினதம் மாண்டதடா களபுடமாய் மூட்டு மூட்டு, கூறுடனே அப்பிரக நவநீதத்தைக் கொன்றவனும் வயித்தியத்திற் கொட்டினேனுன், வீறுடனே செந்தூரம் நன்றாய்க்காட்டல் விளங்கவே பொற்றலையின் சாற்றாலாட்டித், தேறுடனே நூறெருவில் புடத்தைப் போடு செந்தூர மாகுமடா செப்பக்கேளே. 81



கேளப்பா அப்பிரக நவநீதத்தைச் செடியாகத் திரிகடுகு தன்னிற்கூட்டி, வாளப்பா தேன்நெய்யுங் கலந்துகொண்டு மருவியசெந் தூரமிது குன்றி கூட்டி, கோளப்பா கர்மத்தால் வந்ததோஷங் கூட்டோடே போகுமப்பா பத்துநாள்கொள், ஆளப்பா உதிரத்தில் வாயுவெல்லா அபானத்தின் கீழ் வாசல் புக்கிப்போச்சே. 82

போச்சப்பா மேகமென்ற தெல்லாம்போகும் பூண்டதொரு நீரிரக்கம் போகுமப்பா, ஆச்சப்பா சீந்திபுட சக்கரையினாலே ஆச்சரியம் அஸ்திசுரம் தோஷமில்லை, போசசப்பா நாடிகளில் தோஷமில்லை பிரபலமாய்த் தேக மெல்லாம் குளிர்ச்சிபண்ணும், வாச்சப்பா வயித்தியத்திற் சக்கரையேசொல் லார் வாய்ப்பேச்சோ வயித்தியந்தான் வணங்கிக்கேளே. 83

வணங்கிநீ கேளுபுலத் தியனேஅய்யா மாறாட்ட மில்லாமல் சக்கரை யைச்சொல்வேன், குணங்கியே போகாமல் பருத்தண்டாகக் கொண்டு வந்து நிழலுலர்த்திக் காய்ந்தபின்பு, பிணங்கியே போகாம லிடித்துக்கூ ளாய்ப் பிலமாக வடிகொண்டு சூரணித்து, மணங்கியே பொடிபடுதா னுருன் டுக்குள்ளே வாசமாய் நாலுயடி செலத்தைவாரே. 84

வார்த்திடுவாய் மறுநாளி லிறுத்துப்போட்டு மறுபடியுஞ் சலந்திலே முன்போல்விட்டு, கோர்த்திடுவா யிப்படியே பத்துவண்ணங் கூறாகச் செய்த பின்பு சொல்லக்கேளு, பார்த்திடுவாய் புளித்ததொரு காடிக்குள்ளே, பழச் சாறு பதினாறுக் கொன்றுவாரு, சேர்த்திடுவாய் முன்போலே யிறுத்துப் போட்டுத் திறமாக மறுபடியும் செய்யக்கேளே. 85

கேளப்பா புலத்தியனே சீந்திக்கைப்புக் கேட்டதில்லை சித்தரல்லோ செயஞ்செய்வோர்கள், ஆளப்பா வாயிலிட்டா லண்டவரை மட்டு மாகாதைப் பென்றால்வேப் பங்காயோ, வாளப்பா வயித்தியனே யென்றுசொன் னேன் வாதிக்கல் லோருரைத்த மார்க்கமல்லோ, ஆளப்பா ஆவின்மோர் படிநாலுக்குள் அப்பனே கால்படிதான் பழச்சாறாட்டே. 86

பழச்சாறு விட்டபின்பு படிபொடிக்குப் பாங்காகக் கரைத்துவைத்து மறுநாள்கேளு, பழச்சாறு விட்டோ ரிறுத்துப்போட்டுப் பாலாவின் பால் படிக்குப் பொடிபடிதான்போடு, இறீச்சதல்ல வங்கான சீனிகேளு என் சொல்வே னரைப்படிதான் சீனிபோடு, தழச்சுதப்பா ரவியிலே யுலர்ந்த பின்பு தானமிர்த சக்கரையா மென்றுகாணே. 87

காணப்பா இப்படியே சக்கரைபேசொல்லார் கைகண்ட சித்தரென்றால் பிழைக்கச்சொல்வார், வீணப்பா மற்றதெல்லாம் சக்கரையே அல்ல வீறு தின்றதைப்பதனை யடக்கமாட்டார், தோணப்பா சக்கரையை வாயிற்போ டச் சுறுக்கடா அஸ்திசுர மெல்லாம்போகும், பூணப்பா இதினோடே மருந் தூட்டப் புகலுவேன் புலத்தியனே கேளுகேளே. 88

சேனப்பா திரிகடுகு யதுட்சோமம் கொடியான வாய்விளங்கம் நறுக்கு மூலம், சேனப்பா கற்பூரம் குங்குமப்பூ திறம்புடனே சிரசம்சோ ரோசனை கஸ்தூரி, சேனப்பா சாதிக்காய் சாதிப்பத்திரி திருவையுடன் வகைக்கொன்று பலந்தானென்று, சேனப்பா இளவருப்பாய் சூரணித்துத் திருவையுடன் சொல்லக்கூடவிளைத்திடும்பூவே. 89

பூவதனை நிழலுலர்த்தியே சூரணித்துப் புட்டிடாய் சமகூச் சீனிதானாய், பூவதனைச் சேகரித்த சூரணந்தான் புகழுமுற்த சர்க்கரைத்து நாழிக் கொன்றுப்பு, பாவதனைக் கலந்துகொண்டு பதனம்பண்ணு பயோவி பேச் சலம் பறந்துபோகும், ஆவதற லேகியமாய்ச் செய்யாத்தீகளு அம்பனே தாழைவிழுது சாறுவாங்கே. 90

வாங்கியே படிநாலு புதுச்சட்டிக்குள் வாரப்பா; படிநாலு இளநீருந் தான், தேங்கியே ரெண்டொன்றாய்க் கஷாயஞ்செய்ய செப்புவேன் குங் கிலியக பலந்தானென்று, துங்கியே நிறப்புட்கால் பலந்தானென்று உத்த மனே யிந்துப்பு பலந்தானென்று, தாங்கியே கன்றுதீப் பலந்தானென்று, சீர்த்தமா யேலமது பலந்தானென்றே. 91

ஒன்றாக விதுவெல்லா மிடித்துப்போட்டு ஒருபடியா யிதுவபின் னதி லேகேளு, கன்றான சீனியலம் நாலுபோடு ரசபாகம் வருமோசந் தன்னிலே தான், வென்றதொரு அமுர்தசஞ் சீவிதன்னை மேவியரைப் படியளந்து யதிலேபோடு, கன்றான ஆவின்நெய் படிகால்வாரு கலங்காதே நெயிற் பாதி தேனைக்கொட்டே. 92

கொட்டினபின் மெழுகுபதம் தன்னிலேதான் கூறான பீங்கானில் வழித்துவைப்பாய், வெட்டினேன் தேகத்துள் நோய்களெல்லாம் விடய மிட்டு விடயமிட்டுச் சோதித்தேதான், அட்டியாச் சொல்லுகிறேன் அமுர்த லேகியம் அப்பனே யாருக்குஞ் சொல்லவில்லை, மட்டில்லா வயித்தியந்தான் சாஸ்திரஞ்சொன்னேன் மாருட்ட மில்லைபொன்று மிதுக்கொள்வாதே. 93

ஒவ்வாத லேகியத்திற் கழஞ்சிதாக்கு உத்தமனே அப்பிரக செந்தூரத் தைச், செவ்வாகக் குன்றியிடைத் திறமாய்க்கொள்ளு தேகத்தில் மேகசுரம் மேகவெட்டை, கவ்வாக அஸ்திசுரம் வேகம்போகும் கபாலத்தில் வெட் டைசுரம் குட்டம்போகும், இவ்வகைதான் பத்துநாள் கொள்ளும்போது எமனுலும் வெல்லரிது தேகந்தானே. 94

### பவளவங்கச் செந்தூரம்.

தானென்ற பவளவங்கச் செந்தூரங்கேளு சார்வான வங்கமது பலந் தானென்று, கானென்ற கற்பவளம் பலந்தானென்று கைமுறையாய்ச் சிலாசத்துப் பலந்தானென்று, வேனென்ற பழச்சாற்றால் மூன்றுநாள்தான் விடிகாலை மாலைரெண்டு சாமமாட்டி, கோனென்ற வில்லைசெய்து ரவியிற் போட்டு கூறாக உலர்ந்தபின்பு புடத்தைப்போடே. 95



போட்டெடுத்து சாவிலொன்று கெந்திகூட்டிப் புகழான பொற்றலையின் சாற்றாலாட்டி, மீட்டெடுத்து வில்லைதனை உலர்த்தபின்பு வெருசருக்கரை யைம்பதெருப் புடைத்தைப்போடு, மூட்டெடுத்த கருவங்கஞ் செந்தூரந் தான் மோசமில்லை முக்காலும் புடத்தைப்போடு, சூட்டெடுத்துப் பொடி செய்து பதனம்பண்ணு துடியாகக் குன்றியிடை கொள்ளுகொள்ளே. 96

கொள்ளப்பா அமுர்தசஞ் சீவிதன்னிற் கொண்டபின்பு சலக்கழிச்சல் கடுப்புரத்தம், விள்ளடா குதியெரிப்பு லிங்கப்புற்று மேகத்தி னுலெழுந்த தோஷமெல்லாம், அள்ளடா அனுவளவு கற்பத்தாலே யெழுந்ததொரு மேகசல முறிந்துபோச்சு, தள்ளடா எமனுனை வாசிகொண்டு சாற்றுடா மண்டலந்தான் சித்தியாமே. 97

### அயச்செந்தூரம்.

ஆமப்பா அயத்தகடு பலந்தானென்று அப்பனே அந்திமடைக்குச் சூதங் கூட்டி, வேமப்பா கல்வத்தி லாட்டிஆட்டு வீரமொடு நவச்சாரம் பலந்தா னென்று, வாமப்பா மூன்றுநாள் கைவிடாமல் மாட்டியரைப் பொடியாகச் சிவந்துபோகும், மோமப்பா புதுச்சட்டி யடுப்பில்வைத்து மோசங்கள் வாராமல் வறுத்திடாயே. 98

வறுக்கையிலே பதம்பாரு முருக்கம்பூப்போல் வர்ணபதத் தோடு கருகாமல்வாங்கு, நிறுக்கையிலே குன்றியிடை பனைவெல்லத்தில் நேச மாம் கொண்டிடவே சூலைவாங்கும், ஒறுக்கையிலே யிதின்சுறுக்கு எதுக்கு மில்லை ஓகோகோ குஷ்டமெல்லா மொழிந்துபோகும், மறுக்கையிலே யிதின்சுறுக்கு எதுக்குமில்லை வாதநீர் விஷகடிகள் வாங்கிப்போமே. 99

### துரிசிசெந்தூரம்.

வாங்கிப்போக் துரிசிசெந் தூரங்கேளு வாகான அரைப்பொடி தான் பலந்தானென்று, தேங்கிப்போங் கெந்தகந்தான் பலந்தானென்று திறமாக வதன்பின்பு செப்பக்கேளு, தாங்கிப்போக் துரிசிமதிற் பலந்தா னென்று சாதகமாய்ப் பழச்சாற்றில் தினம்ரெண்டாட்டு, ஓங்கியதோர் வீர மது கழஞ்சியொன்று உத்தமனே அரைத்ததனை வில்லைகட்டே. 100

கட்டியே ரவிதனிலே யுலர்ந்தபின்பு கனபுடமே போடப்பா மயங்க வேண்டாம், ஒட்டியே ஆறினபின் செந்தூரந்தா னுண்மையாய்த் திரிகடுகில் குன்றியிடைகூட்டி, அட்டியாய் மண்டலந்தான் கொள்ளும்போது ஆச்சரி யங் குன்மமென்ற தெல்லாம்போகும், சுட்டியே கெற்பத்தில் தோஷம் போகுந் துடியான கிருணியெல்லாஞ் சூட்டப்போமே. 101

### அயக்காந்தச்செந்தூரம்.

சூட்டப்பா வரைப்பொடிதான் பலந்தானென்று துடியான கெந்தகந் தான் பலந்தானென்று, மூட்டப்பா லிங்கமொடு காரசாரம் முனையான உப்புரெண்டு கூடச்சீனம், மாட்டப்பா வகையொன்று கழஞ்சியொன்று நாறியென்ற பூவதிலே கழஞ்சியொன்று, வாட்டப்பா காந்தமது பலங்கால் கூட்டி வளமான பழச்சாற்றி லரைத்திடாயே. 102

அரைத்திடுவாய் ரெண்டுசாம் மைவிடாமல் அப்பனே உலர்த்தியின்பு வில்லைதன்னை, விரைத்திடாய் வராகபுட மாறிப்பின்பு விளங்கியதோர் முருக்கம்பூப் போலாம்வில்லை, நிரைத்துநீ பொடிசெய்து பதனம் பண்ணு நிலையில்லாப் பாவியென்ற பாஷண்டர்காம், கரைதனிக்க வொட்டாது கடலேபுக்கும் கைகண்ட செந்தூரம் கண்டுகொள்ளே. 103

## பாண்டுலேகியம்.

கண்டுகொள்ளு மாவின்பால் படிதானொன்று கைலோசம் கன்னரி விலாமிச்சம்வேர், வீண்டுகொள்ளுஞ் சிந்காயின் கெல்லிவேரும் விளங்கிய தோர் வகையொன்று பலந்தானென்று, உண்டுகொண்ணும் படியெட்டுச் சலத்திறுள்ளே உத்தமனே போட்டெவர்த்திப் படிதானென்று, மண்டபொடப் பாலுடனே கூடவாரு மைந்தனே கமுகம்பூச் சாறுவாரே. 104

வாரப்பா படியொன்று பழச்சாறங்கே வரிசையாய்ப் படியொன்று கரியான்சாறு, சேரப்பா படியொன்று சிந்காய்கெல்லித் தெளிவாகத் தானைச் சாறு படிதானென்று, சாரப்பா செம்பெய்த்துப் பலந்தான்வெல்லந் தான் கரைத்து எரிவிடவே பாகுசேரில், வரப்பா திரிபலை சகந்திரேடு மியல்பான திரிகடுகு வலந்தானே. 105

வலமில வக்கந்தோ லீலைசெம்பு எவர்ச்சாரு சாதிக்காய் நறுக்கு மூலம், வால்மிளகு வாய்விளங்கம் கோட்டமப்பா வகையொன்று பல மொன்று குரானித்து, ஆலவாய் சக்குபொடி யதிலேபோதி யப்பனே பாகு விருகும் போதிற்போடு, சாலவே ஆவின்நெய் படிதான்வாரு தவறாமல் தேனிலே பாதிவாரே. 106

வார்த்திடவே மெழுகுபத மானவாறில் மக்களே பீங்கானிற் பதனம் பண்ணு, கோத்திட்டு லேகசெந்து ரத்தில்நின்று குன்றியிடை தின மொன்றுக் கிருபோதான், சாத்திடவே வெயித்தான் கழஞ்சரெண்டு சாதித்து மண்டலமே இன்பாவாமில், யத்திட்டு எத்தவைப் பாண்டாறு நூம் இலேகியசெந் தூரத்தைக் கண்டபோதே. 107

கண்டவுடன் பாண்டங்கே பறந்ததப்பா சுரம்கள் வெளுத்திருந்த தேகங்கேபோச்சு, கொண்டவுடன் புளிபோடு புகைபிலையுமாகா கொடுமை யுள்ள பெண்ணுகா துணுந்துமாகா, பண்டைய பத்தியத்தை விட்டாரானால் பதிபோவி லேகியசெந் தூரந்தானே, சண்டமா குதம்போலே மெய் யழித்துச் சண்ணுமடா மாற்றுமருந் தில்லைதானே. 108

## மண்டூரசெந்தூரம்.

இல்லையென்று போகாமத் சொல்லக்கேளு எலுமிச்சம் பழம்பத்து காலாய்க்கிழி, தொல்லையென்று போகாமல் அயசெந்தூரம் ஆக்கடா பலங் கால்தான் மண்டூரத்தைச் சொல்லவே சமனாகச் சேர்த்திகூட்டிச் சிராமகப் பழச்சாற்றால் ரெண்டுசாமம், அல்லவே அரைத்தாலிக்கே யுலர்த்தியின்பு அப்பனே வராகப் புடமாறிப்பின்பு, நல்லதொரு செந்தூரம் காலபலமே யாக்கி வகையான இந்துப்புக் கழஞ்சிரண்டுகூட்டே. 109



கூட்டியே முன்மருந்து மொன்றாய்ச்சேர்த்துக் கொண்டுநீ சிரகமோர் கழஞ்சுகூட்டி, நாட்டியே பழத்தாக்கும் சோவிட்டு நலமான கரியான்சாறு நாழிவிட்டு, மூட்டியே கற்றாழஞ் சாறுநாழி முழுகின்ற செருப்படியின் சாறுநாழி, நாட்டிசமாய் மூன்றுமொன்றாய்ச் சாறுவார்த்து சட்டியிலே பழத்தையெல்லாம் பதித்துவையே. 110

பதித்துவைத்துத் தீயெரித்து அவித்துக்கொண்டு பாங்கான பக்குவத் தில் புதுப்பாண்டத்தில், பதித்துவைத்து நெற்குழியில் பத்துநாளவை பகலிலுட தொழுவத்தில் பத்துநாள்வை, பதித்துவைத்துப் பழந்தன்னைத் தினமொன்றாகப் பத்துநாள் கொள்ளப்பா பாண்டுபேரும், பதித் திருந்த வாதநீர்ப் பாண்டாறுவும் பறக்குமடா பறக்குமடா பாண்டெல் லாமே. 111

எல்லாரும் வயித்தியன்போல் நோவுபார்த்தால் இனைத்ததுவோ நோ யப்பா வேளைமாண்பர், வல்லாரும் வாதிமகன் வயித்தியனானவன் மற்ற வர்கள் நோயறியா மடையரப்பா, கொல்லுமடா கெந்தகத்தை வாங்கிநீயுங் கூட்டிவொய் சமனின்ற விடந்திஞ்சானைக், கல்லான கெந்தகமாஞ் சாம மொன்று காணப்பா அரைத்துவில்லை கட்டிப்போடே. 112

கட்டியடா அஞ்செருவிற் புடத்தைப்போடு கலங்காத கெந்தகந்தான் என்னசொல்வேன், வெட்டுமடா குஷ்டமொடு கிரந்திகுலே வெள்ளுமடா ருதபற்பல் கூட்டித்தின்று, பட்டுவிடு மேகமிற மேகசூலை பறக்குமேமேகத்தி லெழுந்தவாய்வு, திட்டமடா பத்துநாள் கொள்ளும்போது சித்தியடா சற் பத்துக் குறுதிகாணே. 113

## வெண்கலச்செந்தூரம்.

உறுதியென்ற வெங்கலச்செந் தூரங்கேளு உத்தமனே வெங்கலந்தான் பலந்தானென்று, அறுதியென்ற லிலாசத்துப் பலந்தானென்று அண்டத் தோல் பலமொன்று குடிலமொருபலந்தான், வீறுதியென்ற வீரமது பலந்தான்ரெண்டு வீறுநீதானகந்தான் பலந்தான்ரெண்டு, பொறுதியென்ற கெந்தகந்தான் பலந்தாறு போட்டரைப்பாய் கல்வத்திற் பழச்சாற்றாலே.

பழச்சாறு விட்டரைப்பாய் மூன்றுநாள்தான் பாங்காக வில்லைசெய்து ரவியிற்காய்ந்தால், வழைச்சல்லோ போட்டுதடா மாட்டிக்கொண்டு வராக புட மானதிலே செந்தூரந்தான், இழைச்சல்லோ வெல்லத்திற் குன்றி யிடைகொள்ள என்னசொல்வேன் குன்மங்க ளெட்டுந்தீருந், தலைச்சிருந் த மேகத்தி லெழுந்ததெல்லாந் தவறண்டே போகுமடா சார்த்துபாரே. 115

## முத்துச்செந்தூரம்.

பாரப்பா முத்துமணிப் பலந்தானென்று பதைப்படங்கா நாகமது பலந்தானென்று, சேரப்பா ருதமொடு பலந்தானென்று சிறப்பான வீர மொடு பலந்தானென்று, வாரப்பா மூலைப்பாலி லரைப்பாயோர்நாள் வர காக வில்லைசெய்து ரவியிற்போடு, வேரப்பா பூக்கழஞ்சி கெந்தகந்தான் விளங்கவே ரெண்டுபலங் கூட்டியாட்டே 116

ஆட்டியே புடம்போடு சோழியப்பா அாகரா முத்துமணிச் செந்தூரந்
தான், காட்டவே மிரத்தியுறும் யோனிப்புற்றும் நல்லிலிங்கப் புற்றுடனே
கண்டமாலை, மூட்டவே மூலங்கள் பிளவையரையாப்பு மூக்கிறுவளே
சுளைத்துறுக்காம் பீனிசங்கள், காட்டவே செந்தூரங் கண்டபோதிற் கா 117
ணப்பா கெடிகலங்கி யோடேர்தானே.

தாளகச்செந்தூரம்:

தானென தாளகந்தான் பலந்தானென்று சம்பழத்தின் சாறுபடிசுறுக்குப்
போட்டு, வேறான முலைப்பால்கால் படியேதாக்கு விளங்கவே நூலறும்
பின்புகேளு, வாறான திருகுகள்ளிப் பால்தானுழி வாங்கியதிற் போடுகிற
மருத்துகேளு, கோறான திருகுகள்ளி உப்புபூவும் கொடியகவச் சாரமொடு 118
வீரந்தானே.

வீரம்பூரத்துடனே வெடியுப்புச்சீனம் விளங்கவே வகையொன்று கழ
ஞ்சியொன்று, சேரவே பொடித்துத்தப் பாலிற்போடு சிறப்பாக மூன்று
நாள் செலமதாகும், கீரலே தாளகத்திற் காரங்கால்தா னிறுத்துவிடு மூன்
சொன்ன பலவிதத்தில், சாரமது கால்பலந்தான் கூட்டிக்கொண்டு சாக 119
வே யரைத்திடுவாய் மூன்றுநாளே.

நான்மூன்று அரைத்துவில்லைப் பணம்போற்கட்டி நலமாகச் சுத்திசெய்
வாய் தாம்பிரத்தைக், கோள்மூன்றாய்த் திருமப்பா ஆரல்வாங்கும் கூறு
வேன் அண்டத்தோல் பலந்தானென்று, கேள்மஞ்சள் கட்டான வளைய
லோடு கெடியான வெடியுப்புக் காரஞ்சாரம், பான்காணுப் பூவீரம் பூரஞ் 120
சீனம் பாங்காக வகையொன்று கழஞ்சிரெண்டே.

ரெண்டேனே யண்டோடு கூட்டிக்கொண்டு கிளைபழச்சா றரைப்
படிதான் விட்டேயாட்டிக், கொண்டேனே வில்லைசெய்து உலர்த்திக்
கொண்டு கொடுத்திடுவா யொவ்வாத ராசிக்கேதான், பண்டேனே தாம்பிர
மது பலந்தானஞ்சு பாங்காகக் குகைக்குள்ளே உருகும்போது, தண்டேனே
தாம்பிரத்திற் பிலத்தசுத்தி, சண்டாள ஆரலறுந் தாம்பிரந்தானே. 121

தானன்றாய்ச் சுத்திசெய்து தாம்பிரந்தன்னைத் தடையறவே மறுகுகை
யி லுருக்கும்போது, எனென்ற தாளகத்தின் மெழுகுவில்லை இடையிடுவா
யொவ்வொன்றாய்க் கொடுத்தபின்பு, தேனென்ற நிறம்போச்சு வெங்கலம்
போலாகும் திடமாக வடித்திடனே தகர்த்துதானாம் பானென்ற கல்வத்
திற் பொடித்துக்கொண்டு பாங்காகக் கண்டிடைக்குச் சூதம்வாரே. 122

சூதத்தி னிறைபோடு வீரந்தன்னைத் துடியாக முலைப்பாலி லரைத்த
பின்பு, காதம்பூ நீறுரெண்டு பத்துக்கொன்று நாட்டியவரை மூன்று
நாள் பின்புகேளு, பாதமென்ற வாலரச மட்டைப்போலாம் பண்பாகக்
கண்டிடைக்குக் கெந்திகூட்டி, நீதமென்ற பொற்றலையின் சாற்றலாட்டி
தி லைத்திடுவா லைம்புதெருப் புடத்தைப்போடே. 123



புடத்திலே யிருந்துறைந்த செந்தூரந்தான் புகலாதே வயிரவர்க்குப்
பூசைபண்ணு. திடத்திலே தாம்பிரத்தின் செந்தூரத்தைத் தினக்குன்றிப்
பிரமாணம் திரிகடுகிற்சேர்த்து, கடத்திலே மண்டலந்தான் உண்ணும்
போது காளான பீலிகையுங் குன்மத்தோடே, சடத்திலே உண்டான
கனப்புவாய்வு, சாங்கமாய்த் தீர்க்குமடா தாம்பிரந்தானே 124

தாம்பிரசெந்தூரத்தைத் தின்னும்போது தட்டென்று குன்மம்போமனுப்
பானங்கேள், காம்பியே புளித்திருந்த காடிபடியொன்று கண்டங்கத் திரிச்
சாறு படிதானென்று, தேம்பியதோர் திருமேனிச் சாறுபடியொன்று சிறு
செருப்புக் கால்சாறு படிதானென்று, வேம்பினுட பட்டைச்சாறு படிதா
னென்று மேலான கையான்சாறு படிதானென்றே. 125

ஒன்றான விஞ்சிச்சாறு படிதானென்று உத்தமனே பசுமலையின் பட்
டைதன்னை, நன்றாக வெண்படிகீ ரொருபடியிற்காய்ச்சி நலமான கெந்தக
மது படிதானென்று, மன்றாகப் பிரமிச்சாறு படிதானென்று வாகாக விது
வெல்லாந் தாளிக்குள்ளே, சென்றிட வொன்பதுசா றொன்றாய்ச்சேர்த்
துச் செப்பக்கேள் பனைவெல்லம் சேரப்போடே. 126

போடக்கேள் மூன்றுபத்துப் பலந்தான்போடு புகழான வெள்ளருக்
கம் வேர்ப்பச்சைப்பட்டை, ஆடப்பா பலமொன்று அரைத்துக்கொண்டு
அப்பனே ஐம்பதுகாய்க் கச்சல்வாங்கி, சூடப்பா நன்றாக நறுக்குத்தட்டி
சுகமாக அரைத்திடுவாய்ப் பிசின்போலாகத், தேடப்பா விருமருந்துஞ்
சாற்றினோடே சேர்த்துநீ கரைத்திடுவாய் செப்பினேனே. 127

செப்பினேன் உனக்காகப் புலத்தியனே அய்யா தீராத குன்மமெல்
லாஞ் சேரத்தீரும், செப்பினேன் சோதிநீர் பலந்தானென்று திரைநரை
யின் நீறுபலஞ் சங்குநீறு, செப்பினேன் பலமொன்று பூநீறப்பா சேரவே
யிதுவெல்லாஞ் சுட்டசுண்ணம், செப்பினேன் திரிகடுகு வாய்விளங்கந்
திப்பிலிமூலத்தினோடு சித்திநானே. 128

சித்திரமூலத்தினோடு கடுகுரோமம் செவ்வியங் கோஷ்டமதாஞ் சீர
கந்தான், முத்திரையாங் காயமொடு வசம்புகாந்த மூளந்தவே வகை
யொன்றுக் கரைப்பலந்தான்சேரு, சத்தியெவாச் சாரம்நவாச் சாரம்சீனம்
சவுக்காரம் பொரிகார மினங்கள்கூடன், பத்தியாய்க் கொடிக்கழற்சிப்
பருப்பித்துப்பு பாங்கான கல்லுப்புப் பாதிசேரே. 129

பாதியாம் வகையொன்று காற்பலந்தான்கூட்டிப் பண்பாகச் சரக்கெல்
லாம் சூரணித்துக்கொண்டு, நீதியாங் கருவேம்பி னிலையை வாட்டி நேரா
கச் சூரணித்து மருந்திற்சேர்த்து, சாதியாஞ் சாறெல்லாம் பாகுசேரில்
தக்கவொரு சூரணத்தை யதிலேபோட்டு, கோதிலாத் தேனுமொரு 130
படிதான்வாரு கூறான நெய்யுமொரு படிதான்வாரே.

வாரப்பா மெழுகுபத மானவாறே வாய்ப்பாகப் பீங்கானில் வழித்து
வைப்பாய், சேரப்பா லேகியந்தான் கழஞ்சியன்னிச் செப்பாகத் தாம்பிரச்
செந்தூரத்தைச், சாரப்பா குன்றிவிடை யாகக்கொள்ள சார்தமாம் புகை
யிலையும் புளியுந்தள்ளு, வேரப்பா அஷ்டகுன்ம மெட்டோடிரும் வெகு 131
சுறக்கு நவசித்தா மணியென்றேனே.

நவசித்தாமணி.

நவசித்தா மணியான லேகியத்தை நல்லதொரு கற்பசித்திக் காகச்
சொன்னேன், புலன்கள் திரிந்தலையும் வயித்தியனேகாண்பான் புத்தி
புன்ன வாதிமகன் குன்மந்திரிப்பன், எவராலுந் தாம்பிரத்தைச் செயிக்க
மாட்டார் இந்தவகை லேகியமுன் செய்யமாட்டார், அவன்பிழைப்புக் கே 132
தாது மென்னறச்செய்வா ரூனாத வயித்தியனு மாமென்றேதே.

ஓதினேன் நிட்சையிரு நூற்றுக்குள்ளே உத்தமனே வடோறுட் பூசை
மார்க்க, மாதியாம் வயித்தியனுக் கப்பாகேளு அவனன்றிச் செந்தூர மாகா
தொன்றுஞ், சாதியாம் ருத்திரசெஞ் மத்தோர்க்கன்றிச் சகலருக்கும் பலி
யாது தவறுண்டேபோம், வாதியா மகன்றனக்கு வயித்தியஞ் சொன் 133
னேன் வயிரவனைப் பூசைபண்ணி வணங்கிப்பாரே.

அயக்காந்தச்செந்தூரம்.

பாரப்பா அரைப்பொடிதான் பலந்தானென்று பரிவான காந்தமதிற்
பலந்தானென்று, சேரப்பா கெந்தகந்தான் பலந்தானென்று திரமான
பூநீறு கழஞ்சியொன்று, காரப்பா பழச்சாற்று லிரண்சாமங் கடுகவே
யரைத்துவெய்யிற் காயப்போட்டு, ஆரப்பா மறுநாளும் ரெண்டுசாம 134
மடங்கவே யரைத்துவில்லைக் காய்ந்தபின்பே.

பின்பதனைச் சுடுசெங்கல் குகைக்குள்வைத்துப் பேசாமல் மேலுமதால்
மூடிக்கொண்டு, வின்பதனைச் சீலைமண்தான் ரெண்டுசெய்து விதமாக
முட்டவறு குழிதான்வெட்டி, அன்பதெருக் குள்ளேதான் புடத்தைப்
போடு ஆறியபின் னெடுக்கச்செந் தூரமாகும், துன்பமது கற்பத்தாற் குடி 135
கொண்ட தோலோடு அவ்விருதற் கனப்பும்பாரே.

கனத்திருந்த நீர்தோஷங் கபாலவாய்வு கண்புகைச்சல் காதுமந்தங்
காணாதோடு, மனத்துறவே சாதிக்காய் சாதிபத்திரி மதுரஞ்சீ ரகமோமம்
கூருசாணியோடு, இனத்திருந்த வாய்விளங்கம் கறுக்குமூல மேலமதி
விடையமொடு காயஞ்சுக்கு, தனத்திருந்த திப்பிலியு மிளகுங்கூட்டிச் சதி
ரான அபின்கோஷ்டந் தானென்றுமே. 136

ஒன்றான மருந்தெல்லாம் வகைக்குக்கேளு உறவாகப் பலமொன்று
வறுத்துக்கொண்டு, கன்றாகச் சூரணித்துப் பின்புகேளு நாலுபலம் பனை
வெல்ல மென்றுஞ்சேர்த்துக், குன்றுமே விடித்ததனை மையாய்ச்சேர்த்துக்
கூட்டப்பா சூரணத்தை ரேகித்தேதான், சென்றுமேம் நறுந்தேனைக் கால்
படிதான்விட்டுச் சிறக்கவொரு பீங்கானி லடைத்துவையே. 137



அடைத்துவைத்த மருந்தப்பா கழஞ்சிரெண்டு அயக்காந்தச் செந்தூரங்
குன்றிகூட்டி, இடைத்துவிடு மண்டலந்தான் தின்னுதின்னு வெளிதல்ல
ஆறுவகைக் கிராணியெல்லாஞ், சடைத்தங்கே யோடிப்போம் புலியுன்
னோர்க்குத் தாக்கிறுற் புளியோடு புகையிலையுமாகா, உடைத்துவிடு முத
சுத்தில் நின்றவாய்வு ஒழுடிந்து போகுமடா உண்மைதானே. 138

வெள்ளியச்செந்தூரம்.

காணப்பா வெள்ளியஞ் சுத்திசெய்து கசகரம துருக்கியே கல்வத்திட்டு,
பூணப்பா வெடியுப்பு ரோமப்பூவும் புகழாகப் பலத்துக்குக் கழஞ்சிவீதம்,
தோணப்பா ராசிவங்கம் பலந்தானென்று துடிகொண்ட கெந்தகந்தான்
பலந்தான்ரெண்டு, ஊணப்பா பழச்சாற்று லிரண்சாமம் நன்றாகவரை 139
த்துவைப்பா யெருக்கம்பாலே.

பாலாலே சாமம்ரெண்டு ஆட்டிக்கொண்டு பதைப்படங்கா வைச்சார
பலமுங்கால்தான்; வாலாகப் பொற்றலையின் சாற்றாலாட்டி ; மாட்டுவாய்
சாமம்ரெண்டு மடங்குமப்பா; சேலாக வில்லைசெய்து ரவியிற்போடு திம்
மாக மூன்றுநாள் காய்ந்தபின்பு; காலாக நாறெருவிற் புடத்தைப்போடு 140
கைமுறையாய் ராசிவங்கங் கனகந்தானே.

கனகந்தான் ராசிவங்கஞ் செந்தூரத்தைக் கைமுறையா யெட்டிலொன்
றாஞ் சூதங்கூட்டிக், கனகந்தான் ரேகமப்பா சீனியிற்கொள்ளக் கண்டுலங்
குஞ் கபாலபுற்றுக் கபாலவாய்வு, கனகந்தான் அஸ்தியிலே பாய்ந்தவெட்
டை சுசமாலக் குன்மமொடு கண்டமாலை, கனகம்போ லுறைந்திருந்த
நோய்களெல்லாங் காணாதே கடல்புக்குங் கருத்தாள்னோர்க்கே. 141

கருத்துறவே வாதிமகன் வயித்தியஞ்செய்தால் கதிகெட்ட நோயாளி
பணியவேணும், கருத்துறவே மருந்துக்குப் பத்தியம்வேணுங் கைமுறை
யாய்ச் செய்கின்ற வயித்தியர்க்கும், கருத்துறவே மனதுவர டக்கவேணுங்
கமுறைபோ லேயிருந்தால் பலியாதொன்றும், கருத்துறவே யிதுக்கல்லோ 142
சித்தர்சாபங் கட்டினார் மனதுவர டந்துகொள்ளே.

டந்துகொள்ளோ நோயாளி ராசாவென்றால் நாட்டினா லவர்க்கங்கே
மருந்தேறாது, தொடர்ந்துகொள்வே னென்றுன்னைப் பத்திவைத்தால் சுறக்
காகத்திருமடா சாபமேது, அடர்ந்துபோ யவன்வாசல் காத்தாயானும் அவ
னுக்குக் கொஞ்சமுமே உபசாரஞ்செய்யான், சடந்தனுக்கு நோய்வந்தால் 143
குருவேயென்பான் சாதூரிய மாய்த்தீர்ந்தால் தம்பியாமே.

தம்பியென்பான் நோயெல்லாந் தீர்ந்தபின்பு தாய்தந்தை குருவென்பான்
நோய்தீராமுன்பு, வெம்பியதோர் மனமாகி வயித்தியனைப்போற்றி வேணப
டி யுபசாரம் பின்பாகட்டென்பான், கும்பியல்லோ கொதிக்குதென்று வுன்
னம்கொந்து கொண்டங்கே வயித்தியனுர் கூர்மைக்கேதான், சம்பியே முகம் 144
வாடிச் சாபம்வைரே சாற்றினேன் வழிதவறிந்து மருந்துவாமே.

வாங்கியே விசுவாச மாகக்கொண்டால் மருந்தென்ன வயித்தியன்கைப் பட்டாற்போதும், எங்கியே திரியாதே வயித்தியசாப மேவிடவே சாபத்தினி விர்த்திகேளு, தங்கிலியோம் விந்துவுட னுதங்கூட்டி உதவாகச் செய்கென்று ஒருலட்சந்தான், பாங்கியே வசெனுட சாத்தியந்தான் பார்பிரமன் மாய னுடு பகருக்கேனே. 145

வயித்தியமுறைமை.

கேளப்பா வயித்தியர்தான் சொற்படியேகேட்கும் கெடியாகச் சித்தருட மறப்பையெல்லாம், வாளப்பா வெளியில்விட்டேன் வயித்தியத்துக்காக மா நிலத்து யோவாளி மயங்காமலய்யா, கோளப்பா வாரிமற் சாபகோபங் கூறி னேன் வாதிமகன் வயித்தியனுகில், தேளப்பா கொட்டுதல்போல் பூவி னீறு சேராட்டால் செந்தூரஞ் சேரப்போச்சே. 146

போச்சுதென்று மலையாதே சொல்லக்கேளு புகழான பூநீறு பலந்தானொ ன்று, காய்ச்சென்றேன் சுத்தஜலந் தன்னிற்காய்ச்சிக் காய்ச்சுவதாகவு வெய்யி லில் நீரேவற்றி, வாச்சென்றேயிருக்கும்பூ மாதளங்காய் மகத்தான பூவப்பா விந்தச்சுன்னம், பாச்சென்றேன் நிலவுப்பு மந்தசுத்தி பண்ணப்பா பறையுப் பு மந்தப்பாவே. 147

பாங்குடனேமுப்பூவும் வெடியுப்போடு பழிகாரச் சூடனோடு அஞ்சும்சே ராய், வாங்கியே கிழிஞ்சியுட சுன்னந்தன்னை வரிசையாய்ச் சமபாக மாகவா ட்டித், தாங்கியே வெள்ளெருக்கம் பாலுவார்த்துச் சாரமாம் பழச்சாறுந் தா ன்வெவ்வேறே, யோங்கியே யிருசாமம் ரெண்டுநீரு மூத்தமனே யரைத்து வில்லை ரவியிற்போடே. 148

போடப்பா பத்துநாள் காய்ந்தபின்பு புகழான சுண்ணாம்பு பொடிக்குள் வைத்து, சூடப்பா கமலம்போல் தீயைமூட்டித் துடியாக யிருசாமஞ் சேரநீ ரும், மாடப்பா விதிருட்டுச் செந்தூரந்தாட்டு வடாங்காத நோய்களெல்லா மகன்றுபோகுஞ், தேடப்பா சிப்பியுட சுன்னஞ்சொல்வேன் திரமான பூநீற் றின் குருவிதாமே. 149

கிளிஞ்சிற்சுன்னம்.

குருவாகுங் கிளிஞ்சியுட சுன்னமப்பா கூறக்கே ளுமகனேச் சுன்ன ம்பன்ன, கருவாகுங் கற்சுன்ன மூவருங்கூட்டிச் சாதகமாய்ச் சுத்தசலந் தன்னிலேதான், திருவாகக் கரைத்ததிலே கிளிஞ்சியிட்டுத் தீயெரிப்பா யிருசாமஞ் சென்றபின்பு, அருளான ஞானமதனைப் பேசப்பண்ணி ஆச்சரியம் உன்மருந்து பூசக்கேளே. 150

பூச்சப்பா வீரமொடு சூடன்சீனம் புழுகுசவ்வச் சாரமொடு கல்லுப்போடு, வீச்சப்பா வகையொன்று பலந்தானொன்று மீதியாந்தோர் கிளிஞ்சியது பலந் தான்பத்து, ஆச்சப்பா மருந்தெல்லா மரைக்கும்போது அண்டத்தின்நீரை லப் ரெண்டுபோடு, நீச்சப்பா பழச்சாற்றி லரைத்துக்கொண்டு கிறக்கவே யுடன்பூசிப் புடத்தைப்போடே. 151



புடம்போடு நூறெருவிற் பிலத்தசுன்னம் பின்பொருக்கால் வெள்ளருக வா லரைத்துருண்டு, திடமாகச் சுருக்கிட்ட சுன்னமாகுஞ் செய்கின்ற கைமு றைக்குச் சேரம்பலாகா, நடமாட வெருக்குமட்டும் வெள்ளருகவாலாட்டி நாலாறு புடம்போடு கடியசுன்னம், உடனுடு சத்துருவா மண்டநீறும் உற்ற தொரு கிளிஞ்சிதன்னை மடக்கலாச்சே. 152

மடக்குமடா புலத்தியனே யுனக்குச்சொன்னேன் வரிசையா யண்ட மது பத்துவாங்கிக், கிடக்குமடா பாண்டத்துள் மீங்கான்வைத்து கெடியாக வதிலிட்டுப் பழத்தின்சாறு, கடக்குமடா படியொன்று அமுங்கவாரு கடுங்காரச் சீனமது கழஞ்சிரெண்டு, அடக்குமடா பொடிசெய்து அதிலே போடு ஐந்துநாள் கடுவெயிற்கு வண்டநீறே. 153

12108

அண்டத்தின் தோடெல்லாம் உருகிச்சாற்றி லப்பனே உறைந்திருக்கு மெடுத்துக்கொண்டு, அண்டத்தைச் சவ்வுடனே [illegible] அழ கான பழச்சாறுஞ் சீனத்தோடு, பிண்டத்தைத் [illegible] சொல்லிப் பேரிட்டு மூன்றுநாள் ரவியில்நீறு [illegible] கல்வத்திட்டு அதிகாரி யெருக்கம்பா லதனிலாட்டே. 154

ஆட்டுவாய் யிருசாமம் வில்லைசெய்து அப்பனே ரவிமுகத்திற் காய்ந்தபி ன்பு, மூட்டுவா யைம்பதெருப் புடத்தைப்போடு முக்கியமாய் நீறும்பின் னெ டுத்துக்கொண்டு, நாட்டுவாய் பத்திலொன்று [illegible]க்கூட்டி நலமான [illegible] கருவா லரைப்பாய்சாமம், பூட்டுவாய் வில்லைசெய்து ரவியிற்காய்ந்தால் புடமொன்று ஐம்பதெருக் குள்ளேபோடே. 155

போட்டெடுத்த அண்டத்துப் பொலிந்துநீராம் [illegible] விந்தவகை யாருஞ்சொல்லார், நாட்டிகமா பூமைதனைச் சுன்னத்திற் [illegible] சனவட்டக் குருவல்ல அண்டவித்தை, மாட்டவே வாதத்தி லேறுஞ்சுன்னம் வளமாக நவச்சாரம் சமனாய்க்கூட்டி, மூட்டிலேகொட்டங் கப்பரியில் வைக்கநீராம் முறையோடெழுதற் குத்துருசி முந்தக்கொல்லே. 156

கொல்லுமடா அண்டநீர் கோபமெத்தக் கொடும்பாவி யுபரசத்தி லாதி சுன்னமே, கொல்லுமடா சிப்பிதனைக் கொன்றுற்கேளு கூறுகிற சிப்பிவித்தை தொலையாதப்பா, கொல்லுமடாசிப்பிசுன்னந் தாலேகேளு கொத்தான சவுக்காரம் செய்யும்போது, கொல்லுமடா பூநீறு கல்லுப்பைத்தான் கூசா மற் பாறையுப்பைக் கொல்லுந்தானே. 157

தானென்ற சவுக்கார மேதாலாச்சு தருவாகக் கருத்திருந்த கெடியாசி ப்பி, வானென்ற அண்டத்திநீராற் சிப்பி மகத்தான சுன்னமடா ஆதியாதி, வேனென்ற வயித்தியத்தை விள்ளப்போய்த்தான் வேறான வழியையுஞ்சிப் பிச்சுன்னம், கானன்றாய்ச் சொல்லிவிட்டே னிதுபொய்யாது நலமான அண்டத்தாற் சிப்பிநீறே. 158

அண்டத்தின் சிப்பிதன்னைச் சுண்ணமாக்கி அரகராசவுக்காரம்செய்வாயாகில், தெண்டனிட்டு வாதம்வந்து முன்னேகாணுஞ் செப்பினேன் புலத்தியனே செப்பக்கேளு, கண்டதொரு குருவென்பார் பூத்தாமென்பார் கைமுறையாய்க் காணுர்கள் கழுதைமாண்பர், விண்டதொரு பூநீறுஞ் செய்யமாட்டார் விளங்கவே சொல்லிவிட்டேன் வேதைபாரே. 159

பாரப்பா சட்டைமுனி பூநீற்றுவித்தைப் பாடினார் பூவைதனைக் குருபண்ணுமற், கூறப்பா சொல்லுகிறேன் பூநீருக் கொடியதொரு சிப்பிசுண்ணம் பலந்தானென்று, சேர்ப்பா சோடகத்தின் குருத்தானன்றிச் செகமறியாப் பூநீறு செப்பக்கேளு, சாரப்பா முதற்றீட்சைப் பூவைக்கேளு சாதகமாய் நாலுபலம் தாக்கியாட்டே. 160

தாக்கிடாய் நிலவுப்புப் பாறையுப்புத் தன்னோடு வகையொன்று பலத்திற்பாதி, தாக்கிடா யுப்புக்குப் பாதிவெள்ளை சவ்வீரம் வெள்ளைக்கு நாலிலொன்று; தாக்கிடாய் சூடனங்கே பலமுங்கால்தான் தயவான புழுகதிலே கழஞ்சிகூட்டு, தாக்கிடாய் வண்டரிசி கழஞ்சிகூட்டிச் சாதகமாய் மருந்து ஒக்க அரைக்கக்கேளே. 161

அரைத்திடுவாய் சர்மமொன்று பழச்சாற்றாலே அப்பனே யெருக்கம்பால் சாமமொன்று, அரைத்திடுவாய் வெண்கருவால் சாமமொன்று அரியதொரு கடுங்கார மெத்தவேண்டாம், அரைத்திடுவாய் வில்லைசெய்து ரவியிற்போட்டு அப்பனே பட்சமொன்று காய்ந்தபின்பு, பரைக்காதி சிவபூசை பாங்காய்ப்பண்ணு பரிவாகச் சுண்ணத்தி லெரித்திடாயே. 162

எரித்திடுவாய் முத்தியு மூன்றுசாமம் என்னசொல்வே ஞதிகுரு வானவாறு, தரித்திரம்போம் வாதமுள்ளாஞ் சவுக்காரமென்ன தாளிப்பார் தாளிப்பா ரெண்ணெய்வாங்க, எரித்திடுவாய் வாட்டிடுவார் வறுப்பார்கோடி யிதமாகப் புடத்தினிலே வைப்பார்கோடி, பெருந்ததொரு வித்தையிது சித்தர்க்காகும் பேசாதே உலகத்தோர் பிழைக்கும்வாறே. 163

வாறான உவர்ப்பூவைக் குருவாய்ச்செய்ய மாட்டினேன் சவுக்காரம் வழலைக்கொக்குந், தேறான பூவினுட குருவைக்கொள்ள டுசெயநீரே செய்துகொண்டு உப்பைக்கட்டி, வீறான உப்பாலே சூடன்கட்டி வேதைகண்ட மார்க்கமடா விளங்கிப்பாரு, நீறான நூறைமுதமோ கோடாகோடி நிலைத்து நின்றகட்டினமோ கோடியாமே. 164

ஆமப்பா விந்தாதி குருவினாலே அடங்காத தொழிலப்பா அமைக்கப்போகா, தாமப்பா சட்டைமுனி ரெண்டுகொண்டஞ் சாற்றியதோ ராயிரத்திற் குருபூநீறு, வேமப்பா விக்குருவைக் கொண்டதாலும் வேருமட்டும் ஒருமட்டும் வினவிநூற்கொள், தாமப்பா சரக்கெல்லாம் வேதையோடுஞ் சட்டைமுனி ஆயிரத்தின் சார்வுகாணே. 165



காணப்பா கைமுறைக்குச் சட்டநாதர் கருத்தறவே சாஸ்திரத்திற் காட்டினார்கேள், பூணப்பா ஒருநூறையோ கோடாகோடி பொன்னோடு வெள்ளிவித்தை ரெண்டும்நேரே, தோணப்பா தேர்நுமட்டுந் நூறையோ கோடி சூட்டினு ரதுகண்டு தோணிப்பாரு வணப்பா வதிவிருந் தாய்ந்திவாத முற்றுப்பார் தவறுது ஒன்றுந்தானே. 166

ஒன்றான வயித்தியத்தின் குருவுஞ்சொன்னேன் ஏகோகோ வாதத்தின் குருவுஞ்சொன்னேன், ஒன்றான மூதண்ட லேகியத்தை உணர்வாகச் சொல்லிவிட்டேன் தீட்சைக்குள்ளே, ஒன்றான பூசைவிதி செய்யுங்கால முறவாடு மறைக்கழுஞ்சி உன்னேகொள்ள, ஒன்றான நினைவாலே ஒளியைக்காணு முற்றுப்பா ராறுமங்கே ஒடியேறே. 167

ஏறடா குளிகையிட்டுக் கற்பங்கொண்டு யிருக்கையிலே உட்பசந்து பெருத்தொந்து, தேறடா தேகமெல்லாம் வெளுப்புக்கண்டு சிந்தையிலே துயரந்தாய்த் தசைநீர்விம்மி, மாறடா தசைவீங்கி மயக்கமானால் மறுபடி தான் சூட்டிற மாறிப்போக, வீறடா சொல்லுகிறேன் சாதிலிங்கம் விளங்கவே பலமொன்று வாங்குவாங்கே. 168

வாங்கிவோ யரைப்பொடிதான் பலந்தானென்று வளமான வீரம்பூக் காரசாரம், தாங்கிவாய் வகையொன்று பலங்கால்வீதஞ் சாதிலிங்கத் திடைபோடு தாரஞ்சிங்கி ஓங்கிவாய் வகையொன்று சூதங்கூட்டி, உத்தமனே பழச்சாறு லரைப்பாயப்பா பாங்குடனே யிருசாமமரைத்தபின்பு பதைப்படங்கக் குகைக்குள்ளே பதித்துவையே. 169

வையப்பா மேல்மூடிச் சீலைசெய்து வரிசையா மைக்தெருவிற் புடத்தைப்போடு, செய்யப்பா வாறினபின் னெடுத்துக்கொண்டு திரும்பவுந்தான் குகைக்குள்ளே சேரவைத்து, கையப்பா கருவளையல் வீரங்காரங் கைமுறையாற் சாரம்பூ நீறுகூட்டி, தொய்யப்பா அயக்களங்கர் தனக்குநேராய்ச் சூட்டியே உருக்கையிலே சுத்தமாமே. 170

சுத்தித்த லோகமடா வங்கமாச்சு தொடுகுறிபோற் சூதத்தைச் சரியாய்ச்சேரு, மத்திக்க உருகுமடா சூதத்தாலு மடங்காத சூதத்தை மடக்கிக்கொல்லும், பத்திதரும் வீரமதிற் சரியாய்ச்சேரு பாங்கான வைலைரசமாகும்பாரு, அத்திக்கு முலைப்பாலா லாட்டியூட்டு அம்மம்மா செந்தூரமாகும்பாரே. 171

ஆகுமடா கெந்தியது ரெட்டிப்பிட்டு அப்பனே யொற்றலையின் சாற்றாலாட்டிச். சாருமடா மூன்றுகா ளாைத்தபின்பு சாத்தடா சிவக்குமட்டும் புடத்தைப்போடு, பாகுபெறும் சூர்குடமாம் புடத்தூக்கேதான் பறக்குமப்பா பதினெட்டுச் சூட்டமெல்லா, மேருமடா கெந்தியது சூலைமேகம் என் சொல்வேன் குன்றியிடை யிதமாய்க்கொள்ளே. 172

### துளசிலேகியம்.

சொன்னவே சொல்லுகிறேன் துளசிதன்னைச் சூருகச் சாறுபாதம் ஒன்று வாங்கி, அன்னமே பனைவெல்லம் பலந்தானொன்று அதிலிட்டுப் பாகுபெறக் காய்ச்சுகாய்ச்சு, அன்னமே திரிகடுகு மதூரம்முமம் சுறுக்கான சாருகோலரிசி கெந்தி, வன்னமே பறங்கியுட பட்டையோடு வாய்விளங்கம் கோட்டமொடு வகைதா னொன்றே. 173

வகைபொன்று பலவீத மாகவாங்கி வாகாகச் சூரணித்துப் பாகிற்றின்டித், தகையாதே நறுநெய்தான் படிகால்விட்டுச் சாறுள்ள தேன்செய்க்குப் பாதிகூட்டித், துகையாக மெழுகுபதந் தன்னிலேதான் தோன்றவே வழித்துவைப்பாய் பீங்கானுள்ளே, பகையான கோய்களென்றும் பதினென்குட்டம் பறக்குமடா லேகியங்கள் ஊர்க்குமுன்னே. 174

கண்பார்த்துக் கைபார்த்து முகத்தைப்பார்த்துக் கண்டிதமாய் பண்டிதத்தைக் கருவாய்ப்போடு, விண்பார்த்து மேகும்பாய்த் திரிந்தாலொன்று மெய்ப்படா தப்பாகேள் விருதுகட்டு, பண்பார்த்து படித்தறுல் வருவதேது, பாசாங்காய்த் திரிந்தாக்கால் வயித்தியமாமோ, பெண்பார்த்து மோகமுற்று பித்தர்போலே பிலக்கவே வயித்தியத்தைப் பேணிப்பாரே. 175

பாரப்பா உருக்கு மேல்தோடு போக்கி பானையிலே ஊறவைத்துப் பதமேபாகிற், சேரப்பா பருக்கையதா யாட்டிக்கொண்டு சிறுகவே வாக்கைதயுடவிலேயுமன்றாய், கூரப்பா அரைத்தபின்பு ரெண்டுநேராய்க் கூட்டியே ரேசித்து நறுநெய்க்குள்ளே, சேரப்பா வெந்தெடுத்த அடையைத்தின்று தின்றபின்பு நெய்யதனைக் குடித்திடாயே. 176

குடித்திடுநீயப்படியே அஞ்சுநாள்தான் கூறக்கேள் நாளொன்றுக் குளுந்துகேளு, திடத்துடனே படியரைக்கால் மூலிநேராய்த் தின்றிடவே சொன்னேன்கேள் திறத்தைப்பாரு, வெடிப்பிளந்து காலுக்குச் செப்பிச்சுண்ணம் விளக்கெண்ணெய் நெய்யுடனே நெல்லிக்காயும், அடிக்குதியிலரைத்துநீ பூசிப்பாரு அப்பனே மண்டலத்திற் கமலமாமே. 177

### நாகசெந்தூரம்.

ஆமடா நாகசெந் தூரங்கேளு அப்பனே தன்கமது பலந்தானொன்று, தாமடா குகைதனிலே யுருகும்போது தாக்கடா மனோசிலைதான் பலமொன்று, சேமடா வெள்ளெருக்கின் றூம்பி வேராட்டுண்டு பீறவேறிப்போம் மூலிவேகம், காமடா கல்வத்திற் கொட்டிக்கொண்டு ரசமதிலே பலமொக்க வாருவாரே. 178

வாரப்பா கல்வத்திற் கொட்டியாட்டு மாய்ந்தபின்பு வீரமது பலந்தானொன்று, சேரப்பா முலைப்பாலா லாட்டியாட்டு திடமாகமூன்றுநாள் பனியிற்போடு, நேரப்பா ரெத்தக்தான் ரெட்டிப்பிட்டு சேர்மையாய் பொற்றலையின் சாற்றாலாட்டி, பேரப்பா வில்லைசெய்து காய்ந்தபின்பு பேதமில்லாக் குகைமாம் புடந்தாருமே. 179



ஆறுன புடத்துக்குப் பொற்றலையின் சாற்றால் அரைத்தரைத்துப் புடம்போடு இங்குமேயார், பேறான நாகசெந் தூரமாச்சு பெருமைசொல்ல வென்றாலே முடியாதய்யா, வாறான கற்பமது சொன்னபோது வயிற்றிலே பெரிவுகண்டு சிறுநீர்கட்டி, தேறாத காயந்தான் உலர்ந்துவற்றித் தேரைபோலே யிளைத்தால் செய்யக்கேளே. 180

செய்யவே யென்றக்கால் சொல்லக்கேளு திரமான நாகத்தின் செந்தூரத்தை, மெய்யாகச் சொல்லுகிறேன் பனைவெல்லத்தில் மெத்தவே கொள்ளாதே குன்றிகொள்ளு, சையோகஞ் செய்யாதே புளியாகாது தாம்பூலமாகாது சட்டுத்திறேர்க்கு, பொய்யல்ல மூலத்திலெழுந்தரோகம் போகுமடா புலத்தியனே கஞ்சாவாங்கே. 181

காஞ்சாவுமேலமொடு சாதிக்காயுங் கடுக்காயுஞ்சுக்குடனே வாய்விளங்க மிஞ்சாம லொடுவேடக்கிச் சூரணந்தான் மிளகோடு திப்பிலியும் நறுக்குமூலம், மஞ்சளொடு பத்திரியுங் கிராம்புதுமம் வரிசையாய்க்குறேசாணி சிற்றரத்தைசூலம், தஞ்சமுற வகையொன்று பலந்தானென்று சாதகமாய் வறுத்துச் சூரணித்துவையே. 182

சூரணந்தான் கண்டதுக்குப் பாதியென்று சுகமாக சீனியது கல்லிற்பாகு கூரலோ மருந்தெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து கூர்மையாஞ் சீலியென்றுத் துவைத்துக்கொண்டு, வேறேநீமருந்துகொள்ள வேறுமோசொல் நீறுகின்ற விம்மருந்து கழஞ்சிகொள்ளே நீறான நாகத்தின் செந்தூரத்தை, நிலைக்கஒரு மண்டலந்தான் குன்றிஉண்ணே. 183

உண்ணவே மூலமெல்லாம் பாழாகுமே யுதானமென்றவாயுவாலே குளிர்ந்துபோச்சு, கண்ணாலே தசவாய்வு மெங்கேபோச்சு கழிச்சல்போ யிரத்தமெல்லா மெங்கேபோச்சு, அண்ணனே கிராணியெல்லா மகன்றுபோச்சு அப்பனே பதினெட்டுக் குஷ்டம்போச்சு, எண்ணவே அனுப்பான மறிந்துகொண்டால் எளிதல்ல பாம்பினுட விடந்தான்காணே. 184

விடமேறிக் கொண்டதுபோல் மெய்யிலுள்ள வியாதியெல்லாம் பாம்புதனைக் கண்டாலோடுஞ், திடமாக நாகத்தின் செந்தூரத்தைச் செப்பினார்களை முறையாற் சேரச்சொன்னேன், வடாது கருவங்கந் கட்டிக்கொண்டு வைப்பேசெந் தூரமாத் திரைதான்செய்வாய், படாரான வங்கமது சேர்ந்துதானால் பரியைமுந்திக் கொள்ளுமடா பாருபாரே. 185

### வங்கசெந்தூரம்.

சொல்லுமே வங்கத்தைக் கொல்லும்கொல்லும் கொடிதான துருசமது பலந்தானொன்று, செல்லுமே செந்திரசந் தனக்குப்பாதி சேர்ப்பாய்வெட்டி லொன்று காரங்கூட்டி, வல்லதொரு மிளகுதுகா லிச்சாற்றாட்டி வாகாக விருசாம மரைத்துக்கொண்டு, நல்லவெள்ளூநீறு கழஞ்சுகூட்டி ஆகாசவங்கமது பலந்தான்ரெண்டே. 186

ரெண்டான வங்கமது உருகும்போது நிறமாகப் பண்ம்போலே வில்லேதட்டி. திண்டுவிட வேகொடுக்க விழுங்கும்பாரு சிறப்பாக மருந்தெல்லாந் தின்றும்வங்கம், கண்டதுண்டோ கன்றுள்ளே யித்தக்கட்டுக் களக்கமடா வங்கமது உருக்கிப்பாரு, திண்டாடும் கண்ணிட்டுக் கருகியுள்ளே சீரணித்துப்போகாது கவுரிகூட்டே. 187

கூட்டப்பா ருசுத்திற் பாதிசேர்த்து கொட்டப்பா கருணைகள் கட்டிப்போச்ச, ஊட்டப்பா கண்டிடைக்குத் தாளகத்தை மூஸ்திப்பாய் சுத்திசெய் தெடுத்துக்கொண்டு, காட்டப்பா வங்கமது உருகும்போது கட்டிமால் தேவிதனைப் பொடித்துப்போடு, பூட்டப்பா நாயுருவிக் காம்பால் கிண்டி புகழான கருவங்கம் பொலிந்ததே. 188

பொலிந்தவங்கங் கலவத்திற் பொடித்துத்தாளாய் பூநாக மெட்டிலொன்று வுலர்த்திப்போடு, மெலிந்துவிடு வங்கத்திற் பாதிரசம் வீரமதில் வங்கத்திற் சமனாய்ச்சேரு, மலிந்ததப்பா வாலேரச மூலைப்பாலாட்டி வாகாக வாட்டியே பதியிற்போடு, நலிந்துவிடும் பின்பதிலே கெந்திதன்னை ரொட்டிப்புச் சேர்த்துநீ காட்டிடாயே. 189

காட்டிறல் பொற்றலையின் சாற்றலாட்டி நாலாநாள் வில்லைசெய்துரவியிற்போடு, ஓட்டிலே வைத்திதனை யோமூடி யுரணாகச் சீலைசெய்து காயவைத்து, தாட்டிகமா யஞ்செருவிற் புடத்தைப்போடு சாதகமா யஞ்சுதாளு சாற்றலாட்டி, மூட்டியே கைமுறையாய்ப் புடத்தைப்போடு மூதண்ட வங்கமது முருக்கம்பூவே. 190

முருக்கம்பூ நிறமென்ன ஒப்போ அல்ல முக்கியமாம் செந்தூரம் பணவெல்லத்தில். நிருக்கறமே குன்றிகொள்ளு மண்டலத்தான் திரிகடுமதுமொடு ரசமுங்கூட்டி, யுருக்கமுடன் பாத்திரத்தில் வைத்துக்கொண்டால், தடிமடா மேகமெல்லா மொழிந்துபோகும் பெருக்கமுடன் வாயுவெல்லா மெங்கே போச்சு பித்தமொடு குட்டமெல்லா மொழிந்துபோச்சே. 191

போச்சடா கிரந்தியொடு சூலைநாகம் புணர்ச்சியொடு விந்துவிலே சென்றவாய்வு, போச்சுதடா வுதரத்தி லுள்ளவாய்வு பொருமலுடன் மேலேப்பம் புழுக்கல்மூலம், போச்சுதடா சூலை வாய்வுகுன்மம் பூரணத்தைக் கொல்லவந்த க்ஷயரோகங்கள், போச்சடா சீனிசங்கள் பாலரோகம் புத்திகெட்ட சித்தர்களே புகலக்கேளே. 192

புகலக்கேள் வங்கமது சுவசமப்பா பொய்யல்ல கூட்டியதோர் கருவங்கத்தால், அகிலமெல்லாம் படைத்தளித்த பாத்திரன்கூறு வாசித்திற் குறிமெத்த வதநூற்செப்பினேன் பிரண்டம் பேதிக்குர் தங்கம்நீறும் பண்ணுவது வங்கத்தாற் பரித்துகாணுவ, செகமெல்லாங் கொள்ளாது தங்கபற்பம் செப்பினேன் புலத்தியனே சேர்த்துகாணே. 193



வெள்ளிவங்கச்செந்தூரம்.

காணப்பா தங்கமது பலிந்தாலென்று கடியதொரு குகைதனிலே உருக்கும்போது, தோணப்பா ருசுமொடு தாரஞ்சியதி சுத்திந்த வெள்ளியம் சாதிலிங்கம், பேணப்பா வரிதாரம் நிமிளையீரம் பேரான வெண்காரமெட்டுங்கூட்டி, பூணப்பா வகையொன்று பலமுங்கால்தான் புகழான பழச்சாற்று லரைத்துக்கட்டே, 194

அரைத்திடுவாய் சாமமொன்று அப்பாகேளு ஆகாகா பூநீறு சாரங்கூட்டி, வரைக்கடங்கா நீருகும் மிவிரைந்து மாட்டுவா யிருசாம மரைத்துக்கொண்டு, நிரைக்கவே குன்றியிடை வில்லைகாய்த்தால் கோசக ஒவ்வொன்றாய்க் கொடுக்கவாங்கும், தரைக்கடங்காப் பொன்னைமருந் தெல்லாமுண்டால் சாதகமாய்த் தங்கத்தின் களங்கம்போச்சே. 195

களங்கம்போ யிருக்கின்ற தங்கந்தன்னைக் கருவலாயல் வீரமொடு காரசாரம், வழங்கவே பழச்சாற்று லாட்டிக்கூட்டி வாகாகச் சோதித்துப் பின்புகேளு, விளைய்கொண்ட வீயமடா தங்கந்தானும் வேதையிதிற் சொல்வதற்கு நாவெழாது, உளம்பெறவே ருசத்தைச்சரியாயூட்டி உத்தமனே வீரத்தை யொன்றுத்தாக்கே. 196

தாக்கடா ரெண்டுபல மூலைப்பாலாட்டுஞ் சாதகமாய் பழச்சாறு கூட்டவாட்டு, வாக்கடா யிருசாம மரைத்தபின்பு வரிசையாய்க் கைமுறையாய்ப் பனியிற்போடு, போக்கடா கெந்தகமிரட்டிப்பிட்டு பூட்டடா தாளகந்தா னுலுக்கொன்று, யாக்கடா பத்திலொன்று சீலையுமிட்டு அப்பனே பொற்றலையின் சாற்றலாட்டே. 197

ஆட்டிவா யிருசாமம் வில்லைசெய்து வாதித்தன் கண்டபின்பு குப்பிக்கேற்றி, மூட்டிவாய் மூன்றுநாள் முத்தியிட்டு முழங்கவே வயிரவர்க்குப் பூசைபண்ணி, நீட்டிவா யருணனிறஞ் செந்தூரத்தைச் சிறப்பான பூரணமடா நோய்களெல்லாங் கண்காணுதே. சந்திரோதயந்தான், நாட்டிவாய் சந்திரோதயத்தைக்கண்டால் கடுங்குமடா நோய்களெல்லாங் கண்காணுதே. 198

கண்காணு நோயோடு காலன்பாவி கடைகெட்டவாங்காரமுள்ளே புக்கி, விண்காணு விந்துவங்கே மேலேயேறும் விருதாக மனதுதன்னை யொன்றாய்ப்பண்ணு, முண்காணு வருதந்தா னுள்ளேபாயு மொன்றல்லக் கற்பத்தை யுறுதிபண்ணும், பெண்காணுச் சையோகம் பிலத்துதென்றுந் பேசாமற் சொல்லுமடா பிறநீர்க்கோவே. 199

பிறநீரோ வாம்பலொடு மகோதரந்தான் பெருவயிறு நீர்ச்சோகம் பித்தரோகம், திரமான வாதத்தி லெழுந்தரோகஞ் சிலேஷ்பனத்தா லெழுந்ததொரு தோஷந்தோஷம் சுரமான பதினெட்டுச சன்னிமூலம் வளாகா குன்மமொடு பீலிகையுந்தானு, முறவான கிரந்தியொடு மேகசூலை யோனிப்புற் றட்சிலைக ளொன்றில்லாதே. 200

ஒன்றல்ல சதையிலுள்ள தோஷம்போகும் முத்தமனே சாம்பிறுந்த
தோஷம்போகு, மொன்றல்ல வபானனின்ற வாயுவாலே ஒருகோடி கோ
யுண்டா மொப்பார்சொல்ல, ஒன்றல்ல உத்தியின்கீ ழபானனின்று றுடலே
யெல்லாந் தெடிப்பதற்கு நின்றுகொண்டா, மொன்றல்ல விளமபோக்கிச்
சிலமாய்ச்செய்தால் முறிந்து போமூலத் தபானன்றானே. 201

தானென்ற ரோயெல்லா மபானனாலே சாற்றுவது பிராணனென்ற வா
யுவாலே, வானின்ற நிசைபந்தும் உதானனாலே வந்துடா வெழுவாயுவ
மிதிலேபுக்கி, வேனென்றநோயெல்லாம் படைத்ததப்பா மெய்விழுந்து
போமட்டும் விரோதஞ்செய்யும், வென்ற பூரணசத்தி ரோதயத்தை யென் 202
னளவு முட்கொள்ள விடைத்துபோச்சே.

## சுயமாக்கினிகுமாரம்.

போச்சடா சீனியிலே செய்தான்கூட்டிப் புகழான திரிகமேரு சிரகமுங்கூ
ட்டிப், போச்சென்ற நோய்களெல்லாஞ் சேரத்தானே புக்குமடா காண்மெ
ய்கே கடல்களெங்கே, போச்சடாகற்பத்தால் வந்ததோஷம் போகுதடா
பூரணத்தைத் தின்றதாலே, போச்சப்பா கற்பங்க ளெல்லாம்யாரு பூண் 203
டதொரு சுயமக்கினி குமாரன்போக்கே.

குமாரனென்ன வேசுறுக்குக் கொள்கினேன்கேள் குற்றமெல்லாந் தீர்
த்திருந்த வயத்திரியங்கு, சமானமதாய்க் காந்தத்திரியந்தானுஞ் சரியாகவகை
யென்று பலந்தானென்று, அமராதே தாளகந்தான் பலத்திற்பாதி யுப்பனே
கெந்தகமும் பலந்தானென்றே, எமராய ரசமறைப் பலமுங்கூட்டி எலுமிச் 204
சம் பழச்சாற்றாற் சாமமாட்டே.

ஆட்டுவாய்க் கற்றழுந்த சாருசாமம் அப்பனே ரசகினனைத் தில்லைவத்து
மூட்டுவாய் ரவிமுகத்தில் திங்களொன்று முடித்துருக்குஞ் சமுஞ்சியதில் வீரம்
போட்டு, மாட்டுவாய் யென்சொல்வே னரைக்கும்போதில் மகத்தானரவி
முகத்தி லெல்லாம்நீறும், ருட்டுவாய் செற்பநோய் குலமேகந் தொலைந்தி 205
போற் குன்மத்தைத் தூரத்தும்பாரே.

பாரத்துமடா அக்கினி குமாரனபாகஞ்சு சொல்லின்வாய்நோக்துமுன் பே
சுழற்றிவெட்டு, மரத்தினிலே யிருப்புபட வைத்தாப்போலே யறுத்துவிடு
மகாராச புத்திரன்தான், சித்திரிலே வாய்வோது செலந்தானேது தேகத்
தில் தசைகளுட வலிதானேது, சுரத்தினிலே பிறமுறை சுரங்களேது துடி
க்குமொரு விழிநோய்கள் தொன்றுவாற்றுதே. 206

ஆறுமலைக் கிருனியெல்லா மகன்றுபோகு மப்பனே மகோதரத்தை
யறுக்கவாங்கும், கறுவின்குறைதீரவு நரம்புடமெல்லாம் குடிப்போமே
மென்றுசொல்லிக் குமாரம்தோடு ஒருமொழி பேசாமல் விரைக்கங்கோ
டும் கெட்டவெளி நோய்களெல்லாஞ் விழுவாய்ப்போகும், தேறுமிந்தக் குமா
ரனர்க்க மாக்கும்தில்லை செப்பினே னிதுவமிர்த தெளிந்திடாயே. 207.



## ஆனந்தவயிரவன்.

தெளிந்திடவே யானந்த வயிரவன்தான் செப்பரிது செப்புகிறேன்
புலத்தியனே அய்யா, கவிந்தவொரு பசத்தலையின் பாலிஞ்சொல்லித் கவு
ரிலிங்கஞ் சிலைதாரம் காரகாமி, வழிந்தகெந்தி வீரமொடு சிங்கிதோட்டு
வகையொன்று பலமொன்று மண்டலந்தான், குளிர்ந்தருதிப் பெண்ணமுரி
கற்றுழம்பால் கொட்டியரை யென்சாமம் ரவிழ்ந்தபோடே. 208

போடப்பா வில்லைசெய்து காய்ந்தபின்பு புடமொன்று பத்தெருவில்
மணற்குள்போடு, நீடப்பா நீறியது இடைபோகாது நெருகின்ற தாத்த
மொரு பலத்தைக்கூட்டு, சூடப்பா சூடமொரு பலந்தானென்று சூட்டிய
பின் சுருக்கழுந்தி னக்கிப்போடு, ஆடப்பா விதிறுட்டு மகாரசன்னி யான
ந்த வயிரவனும் பொன்னாமத்தே. 209

மத்திலுட சாற்றாலே சாமமொன்று வாகாக யிளகுபோற் உண்டை
செய்து, பெற்றவொரு சாம்பிராணிப் புகையிற்காட்டிப் பெருமையொத்த
வெள்ளியுட சிமிழ்க்குள்வைப்பாய், சத்தியுட சாபத்தை நிவர்த்திசெய்து
சாதகமாய் வயிரவனைப் பூசைபண்ணி, முத்திபெரும் குளிகையெல்லாம்
முன்பின்பாராய் முனையென்ற சன்னியெல்லா முறிந்துபோமே. 210

முறிந்துபோம் குன்மமொடு குட்டம்மூலம் மூலத்திற் கிராணியொடு
வனந்தவாய்வும், முறிந்துவிடு மானந்த வயிரவனைக்கண்டால் மோசமடா
வென்றுசொல்லி நோய்களெல்லாம், முறிந்துபோம் செந்தூர விதங்கட்
கெல்லாம் மெய்பூவின் குருவிலுட மூர்க்கமப்பா, முறிந்துபோம் ரசகற்பம்
கண்டாலப்பா மோகமாய்ச் சூதபற்பஞ் சொல்கிறேனே. 211

## சூதபற்பம்.

சொல்லுகிறேன் வெண்முள்ளிப் பழத்தின்சாறு தோன்றுகண்டங் கத்
திரியின் பழத்தின்சாறு, வெல்லுகிறேன் நீர்முள்ளி காவெள்ளருள்ளி விளங்
கவே குறட்டையுட பழத்தின்சாறு மல்லுகிறேன் படியொன்று வகையொன்
றப்பா வருகபத்தைப் பலங்கெந்திக் கல்வத்தாட்டு, சொல்லுகிறேனென்று
சொல்லும் செந்திலயத்தான் குருவிதிலே கழுஞ்சியஞ்சு கூட்டியாட்டே. 212

ஆட்டவே சாறெல்லாம் வற்றவற்ற ஆச்சரியங் காசுபோல் வில்லை
செய்து, மூட்டுவாய் ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு முறையோடே கைமுறை
யாய்த் தயிலம்வாங்கு, காட்டுவாய் சூதமொரு பலந்தானியம் கலமாகக் கல்
வத்தில் வாருவாரு, கூட்டுவாய் கெந்தியுட தயிலமப்பா குறையாமற் பல
மொன்று கூடவாரே. 213

வாரப்பா குட்டித்தக் காளிச்சாறு வகையாகப் படியொன்று மாளமாவச்
சேரப்பா தயிலமொடு சூதந்தானுஞ் சேர்ந்தரைக்க மூன்றுநாள் மாண்டுபோ
கும், கூரப்பா குகையிலிட்டுச் சில்லுச்செய்து குக்குடத்தில் நீறியது கொ
டுக்குதக்தான், பேரப்பா யிறக்குப்பேர் பச்சந்தூரம் பெரிதான கிரந்தி
யெல்லாம் பிறிந்துபோமே. 214

போமடா வாயுவென்ற தெல்லாந்தேரு புற்றரையாப் போகெடி நடத்தின்புற்று, ஆமடா லிங்கபுற்றுச் சூலைமேகம் நீளவற்ற நோய்களெல்லா மகனுமப்பா, ஈாமடா புடஞ்சயமாய் ரசகற்பூரம் காட்டிறே யிதுவன்றிப் பதங்களுஞ்செய்வார், தாமடா கொண்டாக்கல் வாலைக்கட்டித் தீர்ந்தபோம் பொறுத்தெல்லாஞ் சாருங்காணே. 215

## வயிரபற்பம்.

காணப்பா கட்டுபல மிணங்கன்தேனில் கைகொண்டு மத்தித்து வயிரத் தூக்குக், தோணப்பா கவசமிட்டுப் புடத்தில்நீறுஞ் சுகமாக உட்பூச குருவையப்பா, வீணப்பா வல்லவிது வயிரபற்பம் மீறவே சமனாகச் சூதங்கூட்டி, பூணப்பா சூதத்திற் பாதிவீரம் புழுக்கத்த மிடைப்பாகம் வண்டுகூட்டே. 216

வண்டரிசி சூதத்திற் பாதிகூட்டி வளமான வித்துவிறுல் மாட்டியாட்டு, ரெண்டோ ஜாமைத்தபின்பு வில்லைதட்டு நேராக உலர்த்தபின்பு புடத்திற் போடு, கண்டவரார் வயிரத்தைப் பற்பமாகக் கடினமடா வயிரமது பற்பஞ் செய்ய, பண்டையிலே யிதனாலே பரியைநீற்றிப் பரிசனத்தில் வீரமிட்டு வேதைபாரே. 217

வேதையாக் தங்கபற்பந் தேனிற்குன்றி வீதமடா மண்டலங்கொள் ளயமெல்லாம்போம், பாதையாம் வச்சிரத்தால் தங்கநீற்றிப் பாசமாய்க் கொண்டுவந்த மார்க்கமப்பா, பேதையார் தேகமெல்லாம் பொன்போலாகும் பின்னேகட்குச் செய்திட்டால் பெலக்ககாயந், தானைதேய யமிருந்துத் தட்டிப்போகுஞ் சகலவித்துங் கைவசமாஞ் சார்ந்துபாரே. 218

பாரப்பா வயிரபற்பம் பின்னெவல்லத்திற் பாங்காக விருமிகர மண்டலந் தான், சாரப்பா தேகமது வயிரம்போலாக் களைப்பிலே வெடித்தபுண்கள் பிணவையோடு, நீரப்பா பவுத்திரமுதற் கண்டமாலை நீராத காடிவிதங்கள் குஷ்டரோகம், பேரப்பா வெப்பென்று கேட்குமுன்பே பிறிந்தாபர னமலே பிறிந்துபோமே. 219

பிறிந்துபோந் தற்பத்தால் வந்தநோவெல்லாம் பிழைபொறுக்கு மோசமிரம் கண்ணுற்பார்த்தால், முறிந்துபோம் மலக்கட்டு கட்டிற்றுனல் மோசமடா மலக்கட்டுந் தீரச்சொல்லுவேன், தீரறிந்து கொருந்தா சவரிக்குப்பு திரியலேமுதற் தக்காக விடையமோமம், அறிந்தாய்வாய் விளங்கவேண்டு மூக்கு மூலம் அப்பனே வகையொன்று பகர்ந்தேனே. 220

ஒன்றப்பா கிலவாலைக் சூரணந்தான் உத்தமனே யரைப்படிதா னுணர்ந்துசெய்து, ஈன்றப்பா மருந்துடனே வெல்லாந்தானாய் நாட்டிறேறக் கன்டிகைக்குச் சிவதைகூட்டிச், சென்றப்பா யோரண்டு தயிலத்தோடே சிறகை கேலியம்போற் செய்துகொண்டு, வென்றப்பா வெருகடிதான் மேனி வாயில் விழுங்குவா யினிப்போடே விழுங்குவாயே. 221



விழுங்குவாய் வெல்லந்தான் கழஞ்சிரண்டு மிஞ்சின்ற நேமெல்லா மறுத்துண்டேபோம், ஒழுங்கான கேப்பீர்க்குக் கெஷாயத்திற்கொள் உத்தமனே யிருமியெல்லா மொழிந்துபோகும். ஒழுங்காத குடல்வாயு மாண்டு போகும் நலமான வயாணவாய்க் கடுப்புத்தோன்று, எழுங்காமல் சுத்தியுண் டாம் நீர்த்தோஷம்போம் இதைப்போலே சுகபேதி யில்லைகாணே. 222

காணப்பா செந்தூரம் லிங்கம்வீரங் கட்டாகக் குருவோடு காரசாரம், பூணப்பா கெந்தகங் கருநாகவங்கம் புகழான வெள்ளையொடு சூதந்தாரம், தோணப்பா தாளகத்தையத்திறேடு தாசிபொன் னிமிளையொடு துத்தஞ் சூடன், வோணப்பா வகையொன்று பலந்தானென்று வெண்கருவி லெருக்கம்பால் நீர்விட்டாட்டே. 223

ஆட்டுவாய் முச்சாம மப்பாகேளு அப்பனே முலைப்பால்நீர் சாமமொன்று, நாட்டுவாய் பழச்சாறு சாமம்நாலு நல்லதொரு பொற்றலையின் சாற்றினாலே, மூட்டுவா யிருசாம மரைத்தபின்பு முனையான வில்லைசெய்து உயிர்போடு, நீட்டுவா யுலர்த்தபின்பு குகையில்வைத்து நிசமாக மேல்மூடிப் புடத்தைச்செய்யே. 224

செய்யடா புலத்தியனே யீசானத்திற் செபமாய் வயிரவர்க்குப் பூசை பண்ணு, செய்யடா மணல்மறைவில் முப்பதெருவாலே திடமாகப் புடம் போடு மயில்கழுத்தாம்வண்ணமாகு, செய்யடா சமனாகக் கெந்திகூட்டித் தீர்க் கமுடன் பொற்றலையின் சாற்றாலாட்டிச் செய்யடா குக்குடமாய் முன்போற் போட்டுத் திடமாகுஞ் செய்செந்தூரந்தான்காணே. 225

செந்தூர மாருமடா பொற்றலையின்சாற்றால் திரும்பியொரு போதரைத்துப் புடத்தைப்போடு, செந்தூரங் கருஞ்சிவப்பா மப்பாகேளு தேனோடு செந்தூரங் குன்றிகொள்ளு, செந்தூர மிர்தசக் கரையிற்கொண்டால் தேகத்தில் வெட்டைசூரஞ் சேரப்போகும், செந்தூர மண்டலமே தின்றுயானால் சிரதோஷஞ் சலதோஷங் கபாலவாய்வே. 226

வாயுவினால் வந்ததொரு மேகசூலை வலிகுன்மஞ் சுவாசகாசே சோகைபாண்டு, நேயமுடனந்திக்குள் சுரமும்போகும் நெஞ்சுவலி தண்டெரிவு பிறநீர்க்கண்டி, ஆயுமே நாதவிந்து விழுங்கும்வாய்வு அப்பனே புழுவெட்டு விழியில்ரோகம், சாயுமே நோய்களெல்லா மிருப்பிடங்களற்றுத் தவறுண்டு போகுமடா சகலநோவே. 227

சகலமாம் நோயெல்லாந் தீர்ந்துபோகுஞ் சாற்றுகிறேன் புலத்தியனே தப்பாதய்யா, சுகமான கெந்திபது பலந்தானென்று சட்டிலே யயப்பொடிதான் பலந்தானென்று, புகலாதே பழச்சாற்று லரைத்துச்சாமம் பூட்டியரை வெள்ளெருக்கம் பாலினாலே, வகையாக விருசாமம் மாட்டி வில்லை வளமாக ரவிமுகத்தி லுலர்த்திடாயே. 228

உலர்த்தியின்பு முப்பதெருப் புடத்தைப்போடு சுத்தமனே பாரப்பா
கண்டுகொள்ளு, அலர்த்தியதொரு கோவெல்லாம் பின்வாங்கிப்போம் அப்
பனே காந்தமது பலந்தானென்று, பலன்பெறவே செந்தியது பலந்தா
னென்று பாங்கான பழச்சாற்றா லரைசாமம், கலந்தாட்டி வெருக்
கம்பால் ரெண்டுசாமங் கட்டிவில்லைத் தானுலர்த்தால் புடத்தைப்போடே.

### மண்டூர செந்தூரம்.

போடவாய் முப்பதெருக் குள்ளே தீதான் போகவிட்ட செந்தூர மாறப்
பாணத்தில், தேடியே கொள்ளப்பா ரோகத்திருக் கிரமமாய் மண்டூ
ரங் கேளுகேளு, வாடவொ யிரந்தான் வருவதற்குச்சென்ற வற்றதொரு மண்டூ
ரம் பலந்தானென்று, கூடவாய் செந்தியது பலந்தானென்று கொட்டு
வாய் சூதமொடு கெவுரிதனே. 230

தானென்ற சீனமொடு தாளகந்தானென்று சாரமொடு வெடியுப்புச்
சாரங்கூட்டிக், காவென்ற வெருக்கம்பா லதுவாலாட்டிக் கல்வத்திலே சாம
மொன்று பழச்சாற்றாலே, வேயென்ற சாமம்ரெண் டாட்டிவில்லை வில்லை
களை காய்ந்தபின்பு | புடத்திற்போடு, கோவென்ற குக்குடந்தான் சமய
முன்போல் குழிப்புடமே யரைத்தரைத்துப் புடத்திற்போடே. 231

புடந்தீர்ந்தா லெடுப்பின்பு மண்டூரந்தான் பெலத்ததொரு செந்தூர மாகும்
பாரு, திடம்படவே யனுபானை மறித்துச்செய்தால் தேகத்திற் பாண்டுவெல்
லாந் தீர்ந்துபோகும், நடம்புரிந்த லிங்கமென்ற சிலையுங்கல்லார் ராசவர்த்தம்
கெவுரியிற்தாரஞ்சிங்கி, விடம்புரிந்த வெள்ளைமொடு தாளகந்தானும் பிறவே
வகையொன்று பலந்தானென்றே. 232

### நவலோக செந்தூரம்.

பலமான தெல்லாந்தான் சமனாய்க் குழம்பாய்த்தா [illegible] செய்
யிட்டாட்டி, பெலமாக விருசாம மரைத்துக்கொண்டு [illegible]
பதங்கமேற்றுக், குலமான நவலோக மெல்லாஞ்சாகுந் [illegible] பதங்கமதை
பலந்தானென்று, நலமாக மூசையிலே யுருக்கும்போது நல்லவெள்ளிப்
பலமொன்று உருக்கித்தீரே. 233

உருக்கியபின் வெள்ளியது கல்வத்திலிட்டு சுத்தமதை மெல்லியதாய்
சீரகூட்டி, பெருக்கமேனி முலைப்பாலை [illegible] பெசாமல் மூன்று
நாள் பணியிற்போடு, கருவான செந்தூரந்தான் பலங்களிட்டு கட்டான
பொற்றலையின் சாற்றாலாட்டு, உருவான குப்பியிலே வாலுகேந்திரம் [illegible]
நாடியான செந்தூரந்தானே. 234

தானென்ற வெள்ளிகலந்த [illegible] சாற்றிடா செந்தூரந் தானேயா
கும், கானென்ற நவமென்றே நிறைக்கிற்காள் ஆருநாகம் பித்தளைதாம் புடத்தி
லேடு, ஏனென்ற லோகமொடு நவலோகந்தான் என்னசொல்வேன் முன்
போல புடமிடப்பாமல், [illegible] செந்தூரம் வெள்ளோடுகும் அள
வற்ற நோய்களெல்லா மகன்று போமே 235



போமப்பா நவலோக செந்தூரங்கண்டால் பொறியான சன்மாந்திர
நோய்களெல்லாம், ஆமப்பா மண்டூரம் போலேயல்ல வப்பனே நவலோக
செந்தூரஞ்செய், ஏமப்பா கைமுறைகள் தப்பாமற்செய் எடுத்ததொரு
செந்தூர மெல்லாமாகும், நாமப்பா நவரத்தின பித்தவீதம் காட்டிநூல
னபதுஞ்செந் தூரந்தானே. 235

### ராஜபூபதி.

தானென்ற சர்வமகா வீரசூர சங்கார ராசபூபதியைக்கேளு, ஏனென்று
பூபதிப்பேர் கேட்குமுன்னே யெமதூதாள் காதவழிக் கப்பால்செல்வார்,
வானென்ற நவலோக செந்தூரந்தான் வகையான நவரத்தின செந்தூரந்
தான், ஏனென்ற வகையொன்று பலமொன்றுக்கு இடைகள்தவ சூதபடி
தாக்குதாக்கே. 237

நாக்கப்பா பலமொன்று சூதபற்பம் தூரிசெந்தூரமது பலந்தானென்
று, வாக்கப்பா மண்டூரம் பலந்தானென்று வீரகான காந்தமது பலந்தா
னென்று, நோக்கப்பா கெந்திபற்பம் பலந்தானென்று நோவகலத் தீர்க்
கின்ற தாம்பிரந்தான், தாக்கப்பா திரிகடுகு பலமொன்றோமஞ் சாதிக்காய்
வாய்விளங்கம் கிராம்புகூட்டே. 238

கூட்டுவாய் அதிவிடையம் நறுக்குமூலங் குங்குமப்பூ கஸ்தூரி வீரம்பூ
ரம், நாட்டுவாய் கோரோசனை சிவதையுடன் ராசவர்த்த மஞ்சனக்கல் பின்
கடுக்காய், சூட்டுவாய் தாளிக்காய் [கெறி]விடம்பாஷாணந் தூதமொடு கரு
நாபி கெவுரிலிங்கம், மாட்டுவாய் வகையொன்று பலங்கால்வீதம் மைந்தனே
மருந்தெல்லாங் கல்வஞ்சேரே. 239

சேரவே யொன்றாக்கி யரைக்கச்சொல்வேன் செம்முள்ளித் தோகை
யடை கரியான்கொள்ளை, ஆரவொடு வல்லாரை வெண்கொளுஞ்சி யா
வாரை முருக்கம்பூச் செம்பரத்தைப்பூ பரமெனும் கற்றாழம் பழத்தின்சாறு
பாங்கான பொற்றலையின் பொன்னூமத்தை, வாரமுடன் வகையொன்
றால் நாளொன்றாக வணங்கவே யரைத்திடவாய் சாற்றினாலே. 240

சாற்றிலே யரைத்துச்சிறு பயறுமட்டாய்த் தவறாமல் உண்டை
செய்து ரவியிற்போடு, கூற்றுவனார் தேசம்விட்டு தேசம்போவார் கூறுன
பூபதிதான் காயக்கண்டு, தேற்றுவார் மானிடர்கள் தேசத்துள்ளோர் தேக
மினிப் பிலத்ததென்பார் இடங்கொண்டேதான், மாற்றினால் வியாதி
யெல்லாஞ் சித்தரப்பா மகத்தான பூபதியை வணங்கிச்செய்யே. 241

### நாகபற்பம்.

வணங்கியே புலத்தியனே அய்யாகேளு வளமான நாகபற்ப மாகச்
சொல்வேன், இணங்காத நாகமது பலந்தானென்று இந்நிடைக்குச் சீலை
யிட்டுக் கொளுத்திவைத்தால், குணங்காமல் கிண்டிவரப் பற்பமாகுங் கூறக்
கேள் பின்னெடுத்துக் கல்வத்திட்டு, மணம்பெறவே பழச்சாற்றால் நாலு 242
சாமம் மடக்கவே யரைக்கையிலே மருந்துபோமே.

மருந்தென்ன விரமொரு பலந்தனைப்போடு வாகான லிங்கமொரு பலந் தான்போடு, பொருந்தவே ரசமதைப் பலந்தான்வாரு புகழாக வில்லை செய்து ரவியிற்போடு, திருந்தவே யந்தசெருவிற் புடத்தைப்போடு திர மான காகமது செந்தூரந்தான், அருந்தவே குன்றியிடை பலவெல்லந்தி லப்பனே குன்மமெல்லா மகன்றுபோமே. 243

## கெந்தகச் செந்தூரம்.

போமடா கெந்தகந் தெந்திரண்டும் புகழாக வகையொன்று பலந்தா னென்று, ஆமடா பழச்சாற்றால் நாலுசாமம் அப்பனே மறுகல்லைக் கன்னிற் கேளு, வேமடா வயப்பொடியுஞ் சூதந்தாரம் வெவ்வேறு பலமொன்று விளங்கவேதான், காமடா காவிலொன்று சாமமாட்டு கவ்வெல்வந் திட்ட மருந் தொன்றுய்ச்சேரே. 244

ஒன்றுக்கிப் பொற்றலையின் சாற்றலாட்டு உத்தமனே யறுசாம மரை த்தபின்பு, நன்றான பத்தெருவிற் புடத்தைப்போடு ரசகெந்தி சாரமா விடைபோகாது, சென்றுடு செந்தூரமென்ன சொல்வேன் ஜோகக்குன்றி யிடை தேனிற்கொள்ளு, குன்றாத குன்மமெட்டு பீலிகையிரெண்டு கொழு த்தமேகா தாந்திருங் கூறினேனே. 245

கூறினேன் சுவாசத்தாச் செந்தூரத்தைக் குன்றியிநில் தேனோடே கூட் டிக்கொள்ள, கூறினேன் நிராம்பல் சோகைதாகம் கொண்டசலக் கழிச்ச லொடு பீனிரோகம், கூறினேன் நீர்க்கடுப்புக் கல்லடைப்பு கொத்தமல்லி நீரகத்திற் கொண்டாற்கேளு, கூறினேன் பித்தங்கள் நாற்பதுமேதிருங் கொள்பிறசீக் கோவைகுட்டம் பதினெட்டோடே. 246

பதினெட்டுக் குட்டமொடு குறைநோயெல்லாம் பறக்குமடா செந்தூர மூச்சப்பட்டால், கெதிகெட்டோட மென்றேடும் வாதமெல்லாம் கெஞ்சவே தானடிக்கு நடுக்குமூலம், மதிகெட்டே னென்றதே புலத்தியனே அய்யா வாய்விளங்கு நிரிகடுகு வோமங்காயம், அதிவிடயம் மெவாச்சாரம் பனை வெல்லந்தா னப்பனே வகையொன்று பலந்தானென்றே. 247

பலமோடு சாரணைவேர் மருந்தோடெல்லாம் பரிவாகச் சூரணித்துப் பாகுசேரு, கலங்கவே திருமேனி கையுட்காலும் கரியசாலும் வெவ் வேறே யுலர்த்தித்தானாய், மலங்காமல் சூரணித்துப் பழஞ்சலப்பா மருந் தோடே சேகரித்து நறுந்தேன்விட்டே, இலங்கவே யொருபோது கழஞ்சி யுண்ண வேகுமடா பித்தபைசங்கள் தொண்ணூற்றாறே. 248

தொண்ணூற்றாறு மிருகடலும் [illegible] கைகண்ட [illegible] கருவாய்ச்செய்தால், [illegible] ந்துக்கெல்லாம் [illegible] கருதியே தாம், [illegible] யுண்ணிருக்கால் உறுதியாய் [illegible] லகம்பொய்யே. 249



பொய்யென்று வுலகந்தான் வேதாந்தத்தைப் பூட்டாமற் சித்தாந்தம் புக்கிக்கெட்டார், பொய்யென்பான் கருவறியான் செந்தூரஞ்செய்யப் போக்கறியா னுலகத்தா னிடைபோக் கென்பான், பொய்யென்பா னவன் வாயில் மண்ணையள்ளிப் போடுநீ பாப்பாவி கொண்டுசென்று, பொய்யென் பா னவன்தன்னை மூலினைவைத்துப் பூட்டுவாய் செந்தூரம் பூசிச் செயயே. 250

## சரக்குகள் சுத்தி.

செய்யப்பா கைமுறைபாய்ச் செய்துகாட்டு செய்தொழிலைப் பாகமாய்ச் செய்யச்சொல்லு, வையப்பா சரக்கெல்லாஞ் சுத்திசெய்து மாட்டப்பா சுத்திக்கு வகையேகேளு, பொய்யப்பா சொல்லவில்லை மேனிச்சாறு புக ழாகப் படியொன்று கற்றாழம்பால், மெய்யப்பா படியொன்று வருரிதா லும் விளங்கவே படியொன்று பாண்டத்தாற்றே. 251

ஊற்றுவாய் பழச்சாறு படிதானென்று உத்தமனே செம்பரத்தம் பூச் சாறுட்டு, ஊற்றுவா யொன்றுக்கித் தம்பலச்சா றொருபடிதான் கூடவிட்டு மூலைப்பால்சேரு, ஊற்றுவாய் படிகால்தான் ரேகித்தேபின் றுறைப்போடு பாலையுப்பு இணங்கவோடு, தேற்றுவாய்க் காராம்பூச் சிவருஞ்சாரம் இமைக வகையொன்று பலந்தான் காலே. 252

காலாகப் பொடிசெய்து போட்டுத்திண்டி காற்றுடா மூலையிலே கட் டாய்வைத்து, மேலான பாஷாணம் லோகத்தோடு வேண்டியதோர் சரக் கெல்லாங் கிழியாய்க்கட்டிச், சேலான ஆறல்விடும் பச்சைஞ்சென்றால் நிரும் பவே ஒருமாத்தைக் காடிக்குள்ளே, மாலாகப் போட்டே மூன்றுநாள்ளை மகத்தான சுத்தியதாம் வயித்தியம்பாரே. 253

பாரப்பா விப்படியே சரக்குசுத்தி பாங்காகச் செய்தாக்கால் சரக்கெல் லாந்தான் காரப்பா வோட்டாது கடுந்தியாலே கட்டாகச் சுத்திசெய்து செந் தூரஞ்செய், ஏரப்பா வைத்தியத்திற் சோம்பலாகா வன்னைப்போற் சுத்தி வகை யாருஞ்சொல்லார், ஆரப்பா புலத்தியனே உனக்கிடய்யா அறுபத்து நாலுமித்தச் சுத்திபண்ணே. 254

பண்ணடா காந்தமது பலந்தானென்று பாங்கான கெவுரியது பலந்தா னென்று, கண்ணடா பழச்சாற்றால் நாலுசாமம் கட்டாக வேயரைத்து வில்லைசெய்து, விண்ணடா குகையிலிட்டுக் காரம்போட்டு மேலோடு மூடி யே சீலைசெய்து, கண்ணடா தூருத்திகொண்டு உலையிலூது கலமான காந் தமது மணிபோலாமே. 255

மணியான காந்தமணி பலந்தானென்று வாகான சூதமொன்று கெந்தி ரெண்டு, தனியான பொற்றலையின் சாற்றலாட்டு தப்பாம லறுசாமம் வில்லைசெய்து, துணிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு தூடிகொண்ட செந்தூர மாகப்பின்பு, வணியாக வருசூதம் பொற்றலையின்சாற்று லாட் டியே வில்லைசெய்து புடத்திற்போடே. 256

போடப்பா பழச்சாற்றிற் புடந்தாறென்று புகழான காந்தமது செந்தூரந்தான், ஆடப்பா அரிதார நீறுகூட்டி யப்பனே குன்றியிடை தேனிற்கொள்ள, வாடப்பா பிளவையொடு சூலைவாய்வு மண்டைநோ யொடுகண்டமாலைதீருஞ், சாடப்பா அரையாப்புப் பவுந்திரமுந்தீருஞ் சத்தமடா குதபற்பந் தன்னைச்சேரே. 257

சேரடா ஒன்றாக்கித் தின்றேற்கேநு செந்துநடா லிங்கபுற்று யோனிப்புற்று, பாரடா இரத்தியொடு இந்திரகண்டி பறக்குமடா நோயெல்லாம் பாருபாரு, சாரடா பூரகம் பாலிற்போட்டுத் தண்ணிவிட்டுக் கழுவிப்பாண்டத்திலிட்டு, நீரடா வற்றிடவே வறுத்துப்போடு தேசமாம் பொன்னிறம்போற் பதத்தைக்காணே. 258

காணப்பா பூரகம் சூரணித்துக் கட்டாகத் திப்பிலியும் சூரணித்து, ஊணப்பா ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு உத்தமனே நாங்தேனிற்காசிடைதானிட்டுப், பேணப்பா பற்பமது குன்றிகூட்டிப் பிலப்படவே மூன்றுநாள் கொள்ளும்போது, தோணப்பா நோய்முன்று லெடுத்தரோந் தோன்றிவந்த க்ஷயமெல்லாம் சுழன்றுபோமே. 259

சுழன்றதடா வப்பிரக பற்பத்தாலுந் துடியான சொர்ணத்தின் பற்பத்தாலும், கழன்றதடா தீராத க்ஷயங்களெல்லாங் காடுறைந்து போச்சுதடா தங்கத்தாலே, உழன்றவரும் நோயெல்லாம் ஒழிந்துபோகும் உலோகத்திற் றரும்பயிட்ட வாறதொக்குந், கழன்றதடா மீர்வற்றிச் சயமேதீருஞ் சாற்றுகிறேன் வாதத்தின் தயிலங்கேளே. 260

வாதத்தின் தயிலம்.

கேளப்பா வேப்பெண்ணெய் படிதான்காலு கொடியான வாறதிங்கள் காடிபடிகாலு, வாளப்பா பழச்சாறு படிதான்ரெண்டு மகத்தான குமரிச்சாறு படிதானென்று, வேளப்பா மயிலிறகு பலந்தானென்று வெள்ளைச்சாரணையின்வேர். பலந்தானென்று, நாளப்பா வச்சிரவல்லி வேர்பலந்தானென்று நாறியதோர் காந்தைச்சாற் றரைத்துப்போடே. 261

போடப்பா வேப்பெண்ணெய்க் குள்ளேநீதான் புகழ்தேவதாரமொடு நறுக்குமூலம், நாடப்பா திரிகடுகு வோமங்காயம் நலமாக வகையொன்று பலமுங்கால்தான், ருடப்பா மூலப்பாலி லரைத்துப்போட்டு சுத்தகமலாக்கினியாய்த் தீயைமூட்டு, தேடப்பா பதம்பார்த்து வடிவேப்பெண்ணெய் சகமெல்லா மெய்த்தகறு கெய்யாங்காணே. 262

நறுநெய்தான் படிகாலுக் கொன்றாய்ச்சேரு நலமான தயிலமிது இதைக்குன்கேளு, உறுவேம்பிள பட்டையுட தயிலந்தாறு முத்தமனே நாலுக்கொன்றாகச்சேரு, திறலிகற்பத் தோஷமெல்லாம் நீங்கிப்போகும் தினைவாகக் கண்டத்தின் கீழெல்லாந்தான், அறுபயாய்ப் பூசவாத மென்பதோகிம் அப்பனே முடக்கினகால் தேறும்பாரே. 263



தேறுமடா காசிடைதான் தயிலந்தன்னில் தேறுமொரு காசிடைதான் கூட்டிக்கூட்டி, ஆறமடா தேனிலொரு கடிகான்கூட்டி யப்பிரக செந்தூரங் குன்றிகூட்டி, மாறுமடா மூன்றுநாள் கொள்ளும்போது உத்தமனே வாதமெல்லா மொழிந்துபோகும், மாறுமடா இதைவிட்டுத் தயிலந்தன்னில் மால்தேவி பற்பமொடு குதங்கூட்டே. 264

குதபற்பந் தன்னுடனே மண்டலமே கொள்ளு துடியான பதினெட்டுக் குட்டம்போகும், வாதத்திற் பித்தநீர் தாலுமேகும் மயங்காதே சுறுக்கிதடா வேப்பெண்ணெய்க்குள், ஆதிமுன்பே யிருத்தகைப்பும் போக்கிறோரார், அதிலுடைய வாசத்தைத் தீர்க்கிறவரார் வேதாந்தப் புலத்தியனே உனக்காய்ச்சொன்னேன் மீறுகற்ப தோஷமெல்லாம் விழலாய்ப்போமே.

சவுரித்தயிலம்.

போமப்பா குட்டங்கள் வாதம்போகப் புகழாகச் சொல்லுகிறேன் புலத்தியனேகேளு, நாமப்பா சவுரியது பலந்தானாறு நாட்டினேன் கெந்தியது பலந்தான் பத்து, ஓமப்பா காட்டுள்ளிக் கிழங்குபத்து உத்தமனே வெள்ளாட்டுப் புழுக்கைபத்து, வேமப்பா கார்த்திகையின் கிழங்குபத்து வெள்ளைச்சாரணையின்வேர் பலந்தான்பத்தே. 266

பத்தப்பா பிரம்பினுட கிழங்குபத்துப் பாங்காக ஒன்றாக்கிப் பூத்தயிலம் வாங்கிச், செத்தப்பா போனபிணந் திரும்பிப்பேசும் திரமான குருநேற்றின் செய்கையாலே, மெத்தப்பா வோடாதே குருவைநீயும் மீறுகின்ற தயிலங்கள் வடிக்கும்போது, ஒத்தப்பா சொல்லுகிறே னூற்றுக்கொன்று ஓட்டினால் தயிலமது உறுதியாமே. 267

உறுதியாம் தயிலமது மேலுக்குப்பூசி யொருபோதும் வாதமெல்லா மோடிப்போகும், உறுதியாய்ச் சூதபற்பம் தாம்பிரபற்பம் உத்தமனே தயிலந்தேன் ஒனிகூட்டி, உறுதியாய் மண்டலமே கொண்டபோது ஓடுமே வண்டுகடி குட்டமெல்லாம், உறுதியா யிருந்தகடி யெலிகடிநீர்ப்புண்கள் ஓகோகோ தீருமடா உண்மைதானே. 268

உண்மைதா னெள்ளெண்ணெய் படிதானெட்டு உத்தமனே வேப்பெண்ணெய் படிதானென்று, உண்மையா யெரண்டத் தெண்ணெய்படிரெண்டு உண்மையாய்க் கொப்பரைக் உருமையுள்ள தேங்காய்நெய் படிதானென்று, உண்மைகுன் றொன்றாய்வார்த்து உமரிச்சாறொருபடிதான் கூடவிட்டு, உண்மையாய்ச் சந்தனத்தூள் பலந்தானஞ்சு உயர்தேவ தாரமது பலந்தானென்றே.

ஒன்றாக யெண்ணெய்க்குள் கலந்துபோடு ஓமம்சீரகம்மதுரம் நறுக்குமூலம், நன்றாகத் திரிகடுகு கொத்தமல்லி நாகப்பூ செண்பகப்பூ காமப்பூவும், ஒன்றாகப் பச்சையொடு பேய்ப்புடல் பேய்ப்பீர்க்கு விளங்கவே கையொன்று பலமுங்கால்தான், சென்றாட்டு பழச்சாற்றா லரைத்துப்போடு சேரவே மெழுகுபத மாகக்காய்ச்சே. 270

காய்ச்சவே ஆவின்பால் படிதான்ரெண்டு கரிசாலைச் சாறுமொரு படிதான்விட்டுப், பாய்ச்சிடவே செவ்விளநீர் படிதான்நாலு பழச்சாறு படியொன்று நொச்சிச்சாறு, வாய்ச்சதே படியொன்று மேனிச்சாறு மறுபடியும் செருப்படிச் சாறுபடியொன்று, தாச்சியே படியொன்று, நெல்லிச்சாறு தப்பாமற் கூட்டியே வடித்திடாயே. 271

வடித்திடவே வெண்ணெய்தனைக் கலசத்துள்ளே வாகாகக் கர்ப்பூரம் சவ்வாதுகூட்டி, பொடித்திடவே யாவின்கோ ரோசனை கஸ்தூரி புகழான குங்குமப்பூ வகையொன்றுக்கு, முடித்திடவாய் கழஞ்சியொன்று எண்ணெய் வாசமுகத்திலே பட்டவுடன் வாசமீறி, நொடிக்குமுன்னே சர்வாங்க நோய்கள்போகும் நொய்தான வாசவெண்ணெய் தயிலந்தானே. 272

தானென்ற நோயெல்லா மொழிந்துபோகும் தற்பரமாம் பூநீறு வடிகலசத்துள்ளே, வேனென்ற காசிடைதான் போட்டதாலே விதம்ப்பா இந்தவெண்ணெய் சித்தர்க்காகும், பாயென்றால் பாயுமடா நோயைக்கொல்லப் பறந்துபோய் வெட்டுமடா கபாலவாய்வைத், தாயென்று விந்தவெண்ணெய்ச் சர்வாங்கம்பூசித் தலையிலே தேய்த்தவுடன் முழுகுவாயே.

முழுகிவருஞ் சித்தருக்குச் சொல்லக்கேளு மெய்யெல்லாம் லெட்சுமியின் காந்தியாகும், உழுகவே வெண்ணெயிது கபாலந்தேய்க்கில் உத்தமனே பசும்பயறு சீயக்காயாம், நழுகாத தசையிலுள்ள தோஷம்போகும் நன்றாகத் தேகத்தில் வலியோ இல்லை, விழுகுதடா நோயெல்லாம் நமனும்வாரான் மெய்பொய்யா மென்றவனை மிதியடியால்சாடே. 274

சாடப்பா லோகத்தில் பசாசுதன்னைச் சாதிக்க மாட்டாத லோகத்தோரைச், சாடப்பா சித்தாந்தக் கிரிகையோரைத் தள்ளுபுழுக் குழியில் சண்டாளரைத்தான் சாடப்பா மாயைகொண்ட உலுத்தரைத்தான் சாராத வேதாந்தக் கட்டிறோரைச், சாடப்பா பூரணத்து றேக்கங்காட்டிச் சண்டாள ஞானவாள் கொண்டுவெட்டே. 275

வெட்டென்று சொன்னீரே குருவேஅய்யா மேதினியோர் சித்தாந்த விளக்கமல்லோ, வெட்டென்று சொன்னீரே லோகத்தோரை வேதாந்தந் தானுரைக்கச் சித்தாய்ப்போமே, வெட்டென்று சொன்னதுதா னெவரை மைந்தா வேதாந்தந் தனைப்புகழ்ந்து மதிபாதாரை, வெட்டென்றே னவனுடைய பாவந்திர வெருசுறுக்காம் புலத்தியனே விள்ளக்கேளே. 276

நீற்றினதிராவகம்.

விள்ளக்கேள் நாயுருவி தாழையுப்பு மேனியுப்பு வேதையுப்பு வாழையுப்பு, விள்ளக்கேள் கேழுப்பு வெள்ளெருக்கினுப்பு விடமான வழுரியுப்பு கள்ளியுப்பு, விள்ளக்கேள் வெடியுப்பு பலமோபத்து விதமான சீனமொன்று சவுட்டுப்போடு, விள்ளக்கேள் பலமொன்று வகைதானப்பா வெள்ளைகாரம் பலமிரண்டு கல்லுப்பொன்றே. 277



ஒன்றான பூநீறு சாரஞ்குடன் துசோசோ தாரிசஅன்ன பேதிவெள்ளை, நன்றாக வகைக்குஅரைப் பலபோகூட்டு நாடேறி சிளிஞ்சியது சுத்திபன்னி வென்றதொரு சிப்பியது பலமுங்கால்தான் விசையடங்கக் கல்வத்திற் பொடித்தொன்றாக்கிச், சென்றுசெம் புப்பியிலே திநீர்வாங்கு சித்தர்மெய்த்திரப்பா செப்பொறுதே. 278

ஒன்றான நீரலே தங்கம்நீறும் உத்தமனே வெள்ளிமுதல் வங்கம்நீறும், நன்றான நாகமுதல் லோகம்நீறும் ரசமோடு காந்தம்பலகரையும் நீறும், பன்றான நவரத்தினம் வெவ்வேறுநீறும் பாஷாணச் சரக்கெல்லாம் பழமுன்னீறுந், தன்றான வுபரசங்கள் தானேநீறுந் தருகற்பத் தால்வருநோய் தள்ளக்கேளே. 279

கேளடா கலபமிது நீரென்றால் கேட்குமடா சரக்கெல்லாஞ் செந்தூரந்தான், காளடா பிலத்திருக்க தேதுவென்று நாடிப்பா ரிதனாலே சந்துத்தாலும், வேளடா விக்கீலை முன்னீர்செய்து வேண்டியதோர் செந்தூரஞ் சொன்னதெல்லாம், ஆளடா சத்துவகைத் தங்கங்கூட்டி அப்பனே அறிவறிந்து பற்பஞ்செய்யே. 280

செய்யடா குருநீருஞ் செயநீருஞ்சொன்னேன் திறமான பூவினுடகுருநீறுஞ் சொன்னேன், செய்யடா தலைமுழுக்குத் தயிலஞ்சொன்னேன் செந்தூர வகைமுறைகள் சேரச்சொன்னேன், செய்யடா வாதத்தின் குருவுஞ்சொன்னேன் தெளிவான லேகியங்கள் கிருதஞ்சொன்னேன், செய்யடா வாதிமகன் கற்பங்கொண்டால் தேகமடா வயித்தியத்திற் திறவுகோலே. 281

திறவுகோல் வகைக்கொடுத்தே னறிவுள்ளோர்க்கே தேசத்தோர் வயித்தியத்தில் திரம்போதாது, பிறவாத நெறியோர்க்கு வயித்தியமுஞ் சொன்னேன் பிறந்திறக்கும் பாவிகட்கோ வெளிவிட்டேனோ, அறமான வாதிமகன் மனந்தெளிந்து ஆசைவைக்கப் பேரின்பத் தடுத்தோனுகில், உறவாகப் புலத்தியனே புத்திசொல்லி யுரைத்திடுவாய் கற்பந்தான் யோகத்தோர்க்கே.

யோகமெல்லாம் ஞானத்துக் காதிபீடம் யோகத்துக் காதியடா கிரியையாகும், வாகான கிரியைக்குச் சரிதைமூலம் வளமான சரியையென்னவென்றுகேளு, தாகான குண்டலியி லாத்மாவீசன் சகலருக்குஞ் சரியைமுறை தப்பாவண்ணம், ஏகமாய்க் கீழ்முக்கோ ணத்துள்ளாகி யிருந்தவிடமறியார்க ளுலுத்தர்தானே. 283

தானென்ற சரியைவிட்டுக் கிரியையென்ன சாற்றக்கேள் புலத்தியனே மூலந்தன்னில், தானென்ற குண்டலிக்குள் சத்திதன்னைத் தீரமென்றே பூசித்தால் கிரியையாகும், தானென்ற யோகந்தா னென்னவென்றால் தப சாதகந்தியுட மூலந்தன்னில், தானென்ற மனங்கூடி வாசிபார்க்கில் சதகெவரும் யோகத்தைத் தாக்கிப்பாரே. 284

பாரப்பா வாசியினால் யோகமாச்சு பரிவான ஞானமென்ன வென்று கேளு, நேரப்பா தன்னையறிந் துண்மைகண்டு நிலையான தலைவனாய்ப் பரத்திற்சேர்ந்து, ஆரப்பா வறிவாலே பூரணத்தைக்கண்டு வம்பலத்தே நடம் புரிந்தால் ஞானமாகும், பேரப்பா விதுவல்லோ சாலோக சாமீபம் பெருத்தசாரூபசா யுச்சியமாச்சே. 285

ஆச்சடா மனம்புத்தி ஆங்காரந்தான் அரகரா சித்தத்தி லடங்கியேதான், போச்சடா தீட்சைவிதிக் குள்ளேபுக்குப் புதல்வனே புலஸ்தியனே யென்ன சொல்வேன், நீச்சடா ஞானமென்ன வாய்ப்பேச்சாலே நிலைக்குமோ சித்தாந்த நெறிகொண்டோர்க்கு, மூச்சடா முடிவது மொடுங்குவதுங் காணார் முன்னையறியா முழுமடவுலுத்தர்காணே. 286

காணப்பா சண்டாளப் பீசத்தேதான் கனிவாகச் செனித்ததொரு பாவியோர்க்குத், தோணவே வேதாந்தஞ் சொன்னாலுந்தான் சூட்சத்தைப் பார்த்தறியான் மாயைமூடி, ஆணவமாய்க் கழிவதல்லால் வேறொன்றில்லை யாசைகொண்டு பேச்சுரைப்பார் கழுதை மாண்பர், வீணான பின்னைகளைச் சேர்க்கவேண்டாம் விட்டகுறை யுண்டானால் வருவான்பின்னே. 287

வருகாது ஒருநாளுஞ் சொன்னாலுந்தான் வாய்க்குமோ விட்டகுறை யில்லாவிட்டால், உருகாது ஞானத்தி லுண்மையாகி உத்தமனே மனம் வேறு யோடிப்போகும், பெருகாது வேதாந்தஞ் சித்தாந்தத்துள்ளாய்ப் பேய்மக்க ளிறந்தார்பூ ரணநோக்காமல், அரிதாகும் விட்டகுறை வாய்ப்புக் கேளு அப்பனே வாசிகொண்டா லறிந்துபாரே. 288

பாரப்பா மதியிரவி யிரண்டுக்குள்ளே பகர்ந்தோடும் ஞானவுரை சரத்தைப்பார்க்கில், நேரப்பா யிடைகலையில் பெண்ணுருபமாகும் நெறியான பிங்கலையி லாணுருபமாகும், ஆரப்பா அந்திடத்திற் பஞ்சபூதம் அசைகொண்டு வாடுமங்கே கெடியாரந்தான், சேரப்பா நாழிகைதா னொன்றேபாயும் தெளிவான பிரிதிவியில் நாற்றிருபத்தாமே. 289

பத்தான அப்புவிலே கடிகையொன்று பாயுமடா தேயுவிலே கெடியாரங்கேள், சித்தான தொன்றேகால் வாயுக்கேதான் செய்யக்கேள் ஒன்றரைதான் கடிகையாகும், முத்தான வாகாசத் தொன்றேமுக்கால் முழுமதிற் கடிகையா மோசமில்லை, பெற்றதா னிதுக்குள்ளே விட்டகுறை மார்க்கம் பேரின்பம் பூரணகுல் திரத்திற்காணே. 290

காணப்பா சரியையுட புத்திதோறும் கருதிப்பார் கிரியையுட புத்திதோணும், பூணப்பா பேரேது யோகமார்க்கம் புத்திமானென்பதெல்லாங் காணலாகும், தோணப்பா ஞானத்தின் புத்திகாணுஞ் சொற்றிறமாய் மாத்திரையின் பலங்கள் சொன்னேன், பேணப்பா பூரணகுல் திரத்தைப் பாரு பேயான மனந்தேறும் பிசத்திலாதே. 291



பிசற்றில்லா ருத்திரமிரு நூறும்பாரு பேசுமடா பூரணத்தின் நூலைச் சொன்னேன், பதைப்படாங்கு மூலமதில் நன்றாய்ச்சொன்னேன் பரிபாஷை யில்லையடா யாருஞ்சொன்னேன், அதைத்தானே சோதிக்கச் சட்டமுனிநாத னுட்டியதோர் பெண்டிநூடை சூஸ்திரத்திலேதான், விதைத்தானே மூலத்தின் கருவைக்கொண்டு யேலாறு தாரமொடு வாசிதானே. 292

வாசியொடு லட்சியமுஞ் சக்கரமுஞ்சொல்லி வாதத்தின் கருக்களையும் வளமாய்ச்சொல்லி, நேசமுட னேயுரைத்தார் ஒத்துப்பாரு நிலையான பூரணகுல் திரத்திற்றேறும், வாசமுடன் ரோமரிஷி யைம்பதுக்குள் மகத்தான மூலத்தின் வழியேசொன்னார், பேசிடுங்காண் மச்சமுனி தீக்கண்டதீட்சை பேரின்ப ஞானமொரு நூலாற்காணே. 293

நூலிலே திருமூலர் முன்னூறுக்குள் நுழைந்தங்கே பார்த்தவர்க்கு ஞானந்தோணும், காலிலே கால்மூட்டிக் கண்ணைக்காட்டிக் கருத்துறவே யோகவெளி கட்டாய்ச்சொன்னார், சேலான வாதார மாறும் நன்றாய்ச் செப்பினார் வாசிவைத்துத் திறமாய்ப்பார்க்க, மாலான மாயைவிட்டுத் துறவிற்சென்று வழ்பாடு கண்டறிந்து குருவைப்போற்றே. 294

குருவினுட பதம்போற்றி மூலங்கேளு குறிப்பான பூசைவிதி தன்னைக் கேளு, குருவினுட பதம்போற்றி யாதாரங்கேளு கோலமாஞ் சக்கரத்தின் குறிப்புக்கேளு, குருவினுட பதம்போற்றி லட்சியத்தைக்கேளு கோலங்கள் மிகவெடுத்த ஆத்துமாக்கள், குருவினுட பதம்போற்றித் தன்னைக்காணுங் குண்டலியின் குறிப்பைக்கேள் முனையைக்கேளே. 295

கேளப்பாபுலத்தியனே சொல்லக்கேளு கெடியான பரங்கடந்தால் தலைவனாவான், கேளப்பா குருவினடி தொழுதுநின்று கெட்டியாய்ச் சிவபூசை மார்க்கந்தன்னைக், கேளப்பா சொன்னார்பின் தேவிபூசை கிருபைவைத்துச் சொன்னாக்கா லறிந்துபூசி, கேளப்பா பூசைவிதி தப்பாவண்ணம் கெட்டியாய் மவுனத்தின் கிரியைகேளே. 296

கிரியைவிட்டு யோகத்திற் சென்றுகூடி கேசரியில் மனம்வைத்து மூட்டுங்காலே, அறிவான மவுனத்தே வாசிபூது அப்பாபின் சிவதீட்சை சத்திதீட்சை, பிரிவாக யிருகாலம் வைத்துஊது பேரான குளிகையிட்டுப் பெருந்தண்டாகச், செறிவாக மூதண்ட லேகியங்கொள்ளு திட்டமாய் வழலைதனிக் கற்பங்கொள்ளே. 297

கற்பங்கள் கொள்வதிலே மூலிகற்பம் கைக்கடங்கா நோய்களறுங் காலம்பார்த்து, நிற்பமென்றே நோய்பிளக்கும் நோய்கட்கெல்லாம் நெஞ்சிலே கூட்டுதற்கு வயித்தியஞ்சொன்னேன், அற்பமென்று சொன்னாக்கா லெல்லாம்பாழாம் அறிவோடே கற்பமது கொள்ளும்போது உற்பனமா யுறுதிதருஞ் செந்தூரந்தான் உற்றதொரு லேகியங்கள் கிருதஞ்செய்யே. 298

செய்யப்பா தயிலங்கள் சூரணங்கள் செயமான பூபதிகள் கற்பந்தோடு, செய்யப்பா கற்பத்தைக் கொள்ளுமுன்பே திரமாகச் செய்துவைப்பாய் தவறுவண்ணம், செய்யப்பா வயித்தியத்தி லாயிரத்துக்கொன்றாய் செப்பினேன் வயித்தியம்யான் யென்னசொல்வேன், கையைப்பார் முகத்தைப்பார் தசநாடியைப்பார் கருச்சொன்னேன் பதினாயி ரத்திற்கானே. 299

காணப்பா பார்த்துணர்ந்த வாதிமக னுன்றனைவண்ணந் தப்பாமல் வயித்தியஞ்செய்வாய், தோணப்பா வடுகனுட பூசைசெய்வாய் சொற்குருவை மறவாதே லட்சியத்திலுள்ளே, பேணப்பா நந்திகுரு உபதேசத்தாற் பேசாதே சூட்சமாய்ப் பேணிப்பாரு, ஆணவத்தை விட்டல்லோ கற்பங் கொண்டால் ஆகாகா சங்கென்று மூலங்காணே. 300

மூலத்தி னெழுத்தாலே மவுனங்கொண்டு மூட்டினால் வடுகனங்கே நிருத்தஞ் செய்வான், ஆலத்தின் குண்டலிக்கு வடுக்கப்பாரு ஆசையவன் வைப்பதற்கு வடமாலைசாத்து, சீலத்தி னத்தியுட பூசைபண்ணு செயகண்டி காதவொலி மணியிலோசை, காலத்தின் கருவறிந்து பூசைசெய்தால் கைக்குள்ளாம் வயித்தியமுந் தானுமுற்றே. 301

அகஸ்தியர் செந்தூரம் முந்நூறு
முற்றிற்று.

LB
117
121085

# அட்டவணை.


| பாட்டு நம்பர். | விபரம். | பக்க நம்பர். |
|---|---|---|
| 2 | நூல் | 1 |
| 31 | கர்ப்பூரசலாசத்து | 7 |
| 35 | அப்பிரகச்சத்து | 8 |
| 44 | சிமிளாச்சத்து | 9 |
| 48 | சிமிளாச்செந்தூரம் | 10 |
| 55 | தாளகநீறு | 11 |
| 57 | சூதபற்பம் | 11 |
| 67 | அண்டச்சத்து | 12 |
| 73 | சயரோகத்திற்கு லேகியம் | 13 |
| 95 | பவளவங்கச்செந்தூரம் | 16 |
| 98 | அயச்செந்தூரம் | 17 |
| 100 | துருசுச்செந்தூரம் | 17 |
| 102 | அயக்காந்தசெந்தூரம் | 17 |
| 104 | பாண்டுலேகியம் | 18 |
| 109 | மண்டூரச்செந்தூரம் | 18 |
| 114 | வெண்கலச்செந்தூரம் | 19 |
| 116 | முத்துச்செந்தூரம் | 19 |
| 118 | தாளகச்செந்தூரம் | 20 |
| 132 | நவசிந்தாமணி | 22 |
| 134 | அயக்காந்தச்செந்தூரம் | 22 |
| 139 | வெள்ளியச்செந்தூரம் | 23 |
| 146 | வயித்தியமுறைமை | 24 |
| 150 | கிளிஞ்சிற்சுண்ணம் | 24 |
| 173 | துளசிலேகியம் | 28 |
| 178 | நாகச்செந்தூரம் | 28 |
| 186 | வங்கச்செந்தூரம் | 29 |
| 194 | வெள்வங்கச்செந்தூரம் | 31 |
| 203 | சயமாக்கினிகுமாரம் | 32 |
| 208 | ஆனந்தவயிரவன் | 33 |
| 212 | சூதபற்பம் | 33 |
| 217 | வயிரபற்பம் | 34 |
| 230 | மண்டூரச்செந்தூரம் | 36 |
| 233 | நவலோகச்செந்தூரம் | 36 |
| 237 | ராஜபூபதி | 37 |
| 242 | நாகபற்பம் | 37 |
| 244 | லிங்கச்செந்தூரம் | 38 |
| 251 | சரக்குகள்சுத்தி | 39 |
| 261 | வாதத்தின்தயிலம் | 40 |
| 266 | சவுரித்தயிலம் | 41 |
| 277 | நீற்றின்திராவகம் | 42 |

# விளம்பரம்.

இதற்குமுன் எவராலும் அச்சிட்டு வெளிவராததும் ஓலைப்பிரதியினின்றும் எடுத்தெழுதப்பட்ட இதனடியிற்கண்ட அரிய சாஸ்திரங்களைக் கூடியசீக்கிரம் அச்சிட்டு வெளிப்படுத்தக்கூடும்.

அவையாவன:—

| | | | |
|---|---|---|---|
| தேரையர் ரசவர்க்கம் | 1500 | அகஸ்தியர் ஞானசௌமியம் | 1200 |
| டை கருக்கிடை வைத்தியம் | 1000 | டையார் கர்மசூஸ்திரம் | 300 |
| டை யார் பரிபூரணம் | 550 | டையார் வைத்திய காவியம் | 1000 |
| சக்தி ஈஸ்வரர் நிகண்டு | 300 | டையார் மந்திர காவியம் | 1000 |
| டையார் தர்க்க பரிபூரணம் | 300 | டையார் சக்தி ஜாலம் | 1200 |
| பாலையானந்தர் வைத்தியம் | 1000 | டையார் பரிபாஷை | 300 |
| கொங்கணர் முதற்காண்டம் | 500 | டையார் குருநூல் | 600 |
| டையார் கடைக்காண்டம் | 500 | டையார் 12 காண்டஜாலம் | 192 |
| பிரமமுனி வைத்தியம் | 700 | டையார் பரிபூரணம் | 1200 |
| கருவூரார் வாதகௌண்டி | 700 | டையார் ஞானகாவியம் | 1000 |
| மச்சமுனிவாகாரம் | 800 | டையார் இந்திரஜாலகாண்ட | 1200 |
| டை வேதாந்த பெருநூல் | 800 | டையார் ஆறுகாண்டஜாலம் | 1200 |
| யாகோபு வைத்தியம் | 750 | டையார் ஏழுகாண்டஜாலம் | 1200 |
| டையார் செந்தூரம் | 350 | டையார் திவாகரம் தொகுதி | 12 |
| டையார் சுண்ணம் | 300 | டையார் தர்க்கசாஸ்திரம் | 300 |
| டையார் வைத்திய சுருக்கம் | 150 | டையார் தத்துவம் | 300 |
| இராமதேவர் குருநூல் | 200 | டையார் இடைபாகம் | 400 |
| டை நிகண்டு | 550 | டை வாலை பரிபூரணம் | 400 |
| டையார் ஜாலம் | 800 | டையார் கவுமதிநூல் | 400 |
| உரோமரிஷி பரிபாஷை | 300 | டையார் நிகண்டு தொகுதி | 12 |
| டையார் கருக்கிடை | 500 | சுப்பிரமணியர் வைத்தியம் | 1500 |
| டையார் இரண்டடிவைத்தியம் | 500 | டை விருத்தை | 1000 |
| பூஜிமுனிவர் கும்மி | 1000 | டை பச்சணி | 300 |
| டையார் வாதகாவியம் | 1000 | தன்வந்திரி காண்டஜாலம் | 800 |

அச்சிட்டுத் தயாராயிருக்கும் புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இராமதேவர் சிவயோகம் | 200 | புலிப்பாணி வைத்தியம் | 500 |
| சுப்பிரமணியர். | 500 | கெருடாரூடம் கெருடபஞ்சா | |
| டையார் ஞானம் | 200 | டசர ஆரூடம் சத்தியாரூடம் | 300 |
| அகஸ்தியர் பூரணம் | 205 | சிவாரூடம் தேவியாரூடம் | |
| டை வைத்தியரத்தினச் | | காகாரூடம் | 300 |
| சுருக்கம் | 300 | சித்தாரூடம் சர்ப்பாரூடம் | |
| டையார் பூரணசூத்திரம் | 216 | மந்திராரூடம் | 300 |
| டையார் செந்தூரம் | 300 | பரிபாஷை வைத்திய அகராதி | |
| டையார் அமிர்தகலைஞானம் | 1200 | பதினெண்சித்தர் வைத்தியவாத | |
| டையார் பரிபாஷை | 300 | யோக ஞான சாஸ்திரம் | |
| சட்டைமுனிவர் ஞானம் | 200 | 9 பாகம் வரை அச்சிட்டிருக்கிறது | |
| பிரமமுனி வைத்தியம் | 380 | விலைக்குப் பெற்றுக்கொள்ளவும் | |

☞ இ. ராம. குருசாமிக்கோனார்,

புத்தகஷாப் புதுமண்டபம் மதுரை.